Book 9

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்



# ஹஜ்ஜின் காலம் நான்கு மாதங்கள்

ஹஜ் குறிப்பிடப்பட்ட மாதங்களில்
கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

அல்குர்ஆன் 2:197

மே
2000
MAY

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**குர்ஆனைப் போலவே குர்ஆனுடைய அற்புதக் கணிதக் குறியீடும் மிக எளிமையாகவும், அதே நேரம் ஆழ்ந்த சிந்தனை தேவைப்படக்கூடியதாகவும் விரிந்துள்ளது. இங்கே கூறப்பட்டுள்ள மிக எளிய உண்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ள நமக்கு எந்த கருவிகளும் தேவையில்லை. விரிவான அமைப்புடைய உண்மைகளை அறிந்து கொள்ள ஒரு கால்குலேட்டரோ, அல்லது கம்ப்யூட்டரோ தேவைப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மைகளை சரிபார்த்துக் கொள்ள எந்த கருவிகளும் தேவையில்லை.**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில்
   இடம் பெறும் அரபி எழுத்துக்கள் .................................................................... 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ..................................................... 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = 19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 ............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக ........................................................................... 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 ....................................................................... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................ 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக ................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ........... 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = ......................................................................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ............................................. 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ............................................... 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 1

மே 2000
நினைவு 4


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஃசைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ ஒற்றுமையே வலிமை

★ அர்த்தம் அனர்த்தம்

★ 19வது மற்றும் இறுதி வேதம்

★ இறைவனுக்குக் கட்டுப்படுங்கள் தூதருக்குக் கட்டுப்படுங்கள்

★ நேருக்கு நேர்

★ ஹதீஸ்களின் அவல நிலை

★ குர்ஆனும் ஷைத்தானின் சூழ்ச்சி விளையாட்டும்

# ஒற்றுமையே வலிமை

இவ்வுலகில், மனிதர்களாகட்டும், நாடுகளாகட்டும், அரசியல் கட்சிகளாகட்டும், மொழிவாரியாக, இனவாரியாக, தங்களுக்குள் ஒன்று பட்டிருப்பதை நாம் காண்கி றோம். இந்த ஒற்றுமையானது, செயற்கை யானதாகவோ, தற்காலி கமாகவோ உள்ளதாகத்தான் இருக்கிறது என்பதை நமது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் அறிந்துகொள்கி றோம். ஒத்த கருத்துடைய வர்கள் ஒன்று படுவதும் பின் தான்' என்னும் அகந்தையால் வேறுபட்டுப் பிரிவதும் நாம் அன்றாடம் காணும் சகஜமான அனுபவமாக இருக்கிறது. இவ்வகை ஒற்றுமை என்றும் நிலைத்திருப்பதில்லை. மேலும் இந்த ஒற்றுமைக்கு எந்த சக்தியும் இல்லை.

ஆனால் உண்மையான இறை விசுவாசிகளுக்கு இறைவன் ஒற்றுமையை அருள்கின்றார். இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட இவ்ஒற்றுமையானது மறுமையிலும் தொடரக்கூடிய சக்தியுடையதாக இருக்கிறது. வசனம் 3:103ல் இறைவன் அறிவுறுத்துகின்றார்; நீங்கள் கடவுளுடைய கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்துவிட வேண்டாம். உங்கள் மீது கடவுள் புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் விரோதிகளாக இருந்த சமயத்தில் அவர் உங்கள் இருதயங்களில் அன்பையூட்டி, ஒன்று சேர்த்தார். அவருடைய அருளால் நீங்கள் சகோதரர்களாகிவிட்டீர்கள். நரக நெருப்புக்கருகில் இருந்தீர்கள். அதிலிருந்து உங்களைக் காத்துக் கொண்டார். நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு கடவுள் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவுபடுத்து கின்றார். (3:103)

கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட ஒற்றுமையைப் பெற்றுக் கொண்ட நாம் அதனை வலுப்படுத்திக் கொள்ள சில குறிப்பிட்ட வரையறை களை அவர் நமக்குக் கூறுகின்றார். வசனம் 8:46ல், **"உங்களுக்குள் தர்க்கித்துக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தோற்று. உங்கள் சக்தியை சிதற விட்டு விடுவீர்கள். நீங்கள் பொறுமை யாக இருங்கள். கடவுள் பொறுமை யுடையவர்களுடன் இருக்கின்றார். (8:46)**

இவ்வசனத்தை நாம் எச்சரிக்கை யாகவும், கடவுளது அன்புக் கட்டளையாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் வசனம் 17:53ல் கடவுளின் அறிவுறுத்தலைக் காண் போம்.

**"எனது அடியார்களுக்கு கூறும் : அவர்கள் ஒருவருக்கொருவர் மிகச் சிறந்த முறையில் பழகிக் கொள்ள வும். ஏனெனில் ஷைத்தான் எப்போதும் அவர்களுக்கிடையில்**

**பிளவினை உண்டுபண்ண முயன்று கொண்டே இருக்கிறான். (17:53)**

நாம் ஒருவருக்கொருவர் இனிமையான முறையில் பழகிக் கொண்டோமானால் நெருங்கியவர் களாக ஆகிவிடுவோம் என்பது வெளிப்படையான விஷயமாகும். நாம் ஒருவரிடம் கடுமையை வெளிப்படுத்தும் போது அவர் நம்மைவிட்டு விலகிப் போய்விடு கிறார். அதே சமயம் கடுமையாக நடந்து கொள்ள உள்ளம் நம்மைத் தூண்டும் போது அதனைக் கட்டுப்படுத்திக் கொள்வது பிறரது நெருக்கத்தை அதிகரிக்க உதவும் ஒரு வழியாகும்.

னால் அவ்வொற்றுமை விரைவில் அழிந்து விடக்கூடியதாக இருக்கும். இதனையே வசனம் 3:103 வலியுறுத்துகின்றது. கடவுள் விசுவா சிகளுக்கிடையில் விஷேச குணமாக ஒற்றுமையை அருள் செய்கின்றார். அவர்கள் ஒரே குடும்பத்தவராகவும் ஒருவருக் கொருவர் பணிவாகவும் நடந்து கொள்கின்றனர்.அவர்கள் விரைந்து கடவுளின் கயிற்றைப் பற்றிக் கொள்வதுடன் நிராகரிப் பாளருக் கெதிராகக் கடுமையாகவும் நடந்து கொள்கின்றனர். அவர்கள் மார்க்கத்தைப் பிரிவுகளாக்க ஒருபோதும் அனும

## விசுவாசிகள் ஒற்றுமையாக இருக்கும் பொருட்டு குர்ஆனிய கொள்கைகளை ஒருபோதும் விட்டுக் கொடுத்தல் கூடாது. இவ்வாறான விட்டுக் கொடுத்தல் ஒற்றுமைக்கு வழிகோலுவதாக இருப்பினும், அது பிறரை வசீகரிப்பதற்கான செயற்கை ஒற்றுமையாகவே இருக்கும்.

விசுவாசிகள் ஒற்றுமையாக இருக்கும் பொருட்டு குர்ஆனிய கொள்கைகளை ஒருபோதும் விட்டுக் கொடுத்தல் கூடாது. இவ்வாறான விட்டுக் கொடுத்தல் ஒற்றுமைக்கு வழிகோலுவதாக இருப்பினும், அது பிறரை வசீகரிப்பதற்கான செயற்கை ஒற்றுமையாகவே இருக்கும்.

எனவே, விசுவாசிகள் தங்கள் ஒற்றுமைக்கு குர்ஆனிய கொள்கை களை விலையாகக் கொடுத்தோமா

திக்க மாட்டார்கள். கடவுள் அருள் செய்த ஒற்றுமையிலிருந்து நாம் விலகிச்செல்ல சில காரணங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன.

(1) அறிவால், பணபலத்தால், படைபலத்தால் தலைமைத் தன்மையை விரும்புதல்.

(2) சொந்தக் கருத்துக்களினால் வேறுபட்ட நம்பிக்கைகளை உருவாக் கிக் கொள்ளுதல்.

(3) ஒரே ஆதாரத்தைப் பின்பற்றி நடப்பதில் தோல்வியடைதல் இவை யனைத்தும் 'நான்' என்னும் அகந்தையில் உருவாகின்றன. இவ்வாறான பிரிவுகள் நம்மை இணை வைப்புக்கு அழைத்துச் செல்பவையாகவும் இருக்கின்றன.

(4) உதாரணமாக பிறர் நம்மை விமரிசனம் செய்வதை நாம் ஒருபோதும் விரும்புவதில்லை. நமது நிறைகுறைகளை ஒருவர் விமரிசனம் செய்யும்போது கோபப்படுவதும், வெறுப்படைவதும் கர்வத்தின் காரணமாகவேயாகும். இதனைக் கட்டுப்படுத்திக் கொள்ள மாபெரும் சக்தி தேவையாயிருக்கிறது. இதனையே கடவுள் வசனம் : 3:200ல் "விசுவாசிகளே! நீங்கள் பொறுமை யைக் கடைபிடியுங்கள். ஒருவருக் கொருவர் சகித்துக் கொள்ளுங்கள். கடவுளுக்கு பயந்து கொள்ளுங்கள். நீங்கள் வெற்றியடைவீர்கள்" என்று அறிவுறுத்து கின்றார். இந்த சகிப்புத் தன்மை ஒற்றுமைக்கு உதவும் சிறந்த ஆயுதமாகும். இந்த சகிப்புத்தன்மை காரணமாக, அறிவு, பணபலம், படைபலம் இவை எதுவும் குறுக்கிடாத ஒரே சகோதரத்துவம் விசுவாசிகளிடையே கடவுளால் அருள் செய்யப்படுகின்றன.

**(2) குர்ஆனின் கருத்துக்களில் உறுதி கொள்ளாமல், சொந்தக் கருத்துக்களை உருவாக்குதல்**

குர் ஆன் ஒரு சாதாரண சட்டப் புத்தகம் போன்றதல்ல,. எல்லா மனிதர்களுக்கும், அது எல்லா காலத்திற்கும் ஏற்ற ஒரே சட்டப் புத்தகம் ஆகும். மனிதர்கள் இயற்றிய சாதாரண அரசியல் சட்டப் புத்தகங்கள் பிரச்னைக ளுக்கான முழுமையான தீர்வாக மாட்டா. அவற்றிலுள்ள சாதகங் களை மட்டுமே எடுத்துக் கொண்டு பிரச்சனைகளிலிருந்து எவ்வா றேனும் விடுபட்டு விடவே மனிதர்கள் விரும்புவர். கடவுளு டைய சட்டப்புத்தகம் ஈடிணையற்ற தாகும். இதிலிருந்து நாம் பிரச்னை களுக்குரிய சாதக, பாதகங்களை அலசி ஆராய்ந்து மிகச் சிறந்ததையே தேர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறாகத் தேர்ந்து கொள்வது நமக்குப் பாதகமான விஷயமாகத் தோன்றினாலும் கடவுளிடத்தில் அதுவே மிக மேலானதாக இருக்கிறது. மேலும் நமக்கு வெற்றியளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. (39:18). விசுவாசிகள் தத்தமது சொந்தக் கருத்துக்களில் பிடிவாதமாகக் கடுமையாக நடந்து கொள்வது விசாலமான அறிவாகாது. விசாலமான அறிவுதான் ஒற்றுமை யின் திறவுகோல் ஆகும். விசுவாசி கள் எந்தப் பிரச்னையாக இருந் தாலும், குர் ஆனில் உள்ள விஷயங்களைக் கொண்டு மட்டுமே தர்க்கம் செய்து தீர்வுகாண முற்பட வேண்டும். விசுவாசிகளிடம் ஏதேனும் பிரச்னை கொண்டு வரப்படு மானால், தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் தராமல், தேவைப்படும் பதிலைக் குர்ஆன் ஒளியில் பெற்றுக் கொள்ள வேண்டும். உதவி தேவைப்படும். விசுவாசிகளுக்கு சாதக பாதக விஷயங்களை எடுத்துக் கூறுவதும்

மிகச் சிறந்த செயலாகும். இது அவராகவே முடிவுக்கு வர உதவும். மேலும் தமது சொந்தக் கருத்துக்களுக்கும் இங்கு வேலை யில்லை. குர்ஆன் வசனம் 10:19 கூறுகிறது. "மக்கள் ஒரே சமூகத்தவராகவே இருந்தனர். பிறகு அவர்கள் தர்க்கம் செய்தனர்" அவரவர் சொந்தக் கருத்துக்களைக் கொண்டே மக்கள் தர்க்கம். செய்கின்றனர், என்பது வெளிப்படை யான விஷயமாகும். கடவுளுடை யவும் அவருடைய தூதருடையவும் மு கருத்துக்களில் அவர்கள் திருப்திய க டைவதில்லை. இதனையே குர் ஆன் த வசனம் 49:1ல், "விசுவாசிகளே! கடவுளுக்கும் அவருடைய தூதருக் கும் மேலாக உங்களது கருத்துக்க ளுக்கு இடம் தராதீர்கள்...." (49:1) என்று கடவுள் எச்சரிக்கின்றார். கடவுளை நாம் புறக்கணித்தோமா னால் முன்னுள்ள சமுதாயத் தினரைப் போன்றே நாமும் பிரிவினை வாதிகளாகிவிடுவோம்.

கடவுள் நற்செய்தி கூறுபவர்க ளாகவும் எச்சரிக்கை செய்பவர்களாகவும் வேதமளிக்கப் பட்டவர்களை (நபி) அனுப்பும் போது மனிதர்கள் ஒரே சமூகத்தினராகவே இருந்தனர். அவர்களுக்குள் ஏற்படும் விகற்பங் களை தீர்த்து வைக்கும் பொருட்டு சத்திய வேதத்தையும் அருள் செய்தார். அதனைப் பெற்றுக் கொண்ட அவர்கள் தெளிவான ஆதாரங்களுடன் வந்த புதிய வேதத்தினைப் புறக்கணித்தனர். அவர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட பொறாமையின் காரணமாகவே தர்க்கித்தனர். மற்றவர்கள் தர்க்கித்துக் கொண்டவற்றிலிருந்து உண்மையை விசுவாசிப்பவர் களுக்கு கடவுள் அவர் விருப்பப் படிவழிகாட்டினார். இறைவன் தான் விரும்பியவரை நேர்வழியில் நடத்துகின்றார். (2:213)

நாம் பிரிவினைக்கு ஆளாகாமலி ருக்க, மூன்று விதமான தீர்மானங்கள் தேவையாயிருக் கின்றன. முதலாவதாக, சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொள் வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இது அறியாமையாக இருக்கிறது. இரண்டாவதாக, நாம் நல்ல முறையில் குர்ஆனைக் கொண்டு சாதக பாதகங்களை அலசி ஆராய்ந்து மிகச் சிறந்ததை ஒருமித்த மனதுடன் ஒப்புக் கொள்ள வேண்டும். இது வெற்றியைத் தரும்.

இறுதியாக, நமது சொந்தக் கருத்துக்கள் என்று ஒன்றுமே இல்லை என்றும், அவை பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வாக இருக்க முடியாது என்பதில் உறுதியாக இருப்பதுடன், கடவுளின் கூற்றுக்களே தீர்வு காண்பதற்குரியவை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கடவுளிடமே நாம் பொறுப்பேற் படுத்திக் கொள்வோம். ஒரே கடவுள் ஒரே புத்தகம், ஒரே சகோதரத்துவம் என்ற உண்மையான பரிமாணங் களில் கடவுள் நமக்கு அருள் செய்த ஒற்றுமையைக் கொண்டு செயல் பட்டு மாபெரும் வெற்றியை அடைவோம் கடவுள் நாட்டப்படி.

# அர்த்தம் - அனர்த்தம்

ஒரு புத்தகத்தின் மொழி பெயர்ப்பைச் செய்யும் போது நாம் மிகவும் எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் செய்ய வேண்டும். மூலப் புத்தகத்தின் செய்தியை மாற்றாமல், கருத்தைச் சிதைக்காமல் மொழி பெயர்க்க வேண்டும். வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்க்கும் போது கருத்துச் சிதைந்து விடாமலும், கருத்தைக் கூற வேண்டும் என்பதற்காக வார்த்தை களின் தாத்பர்யத்தை மாற்றி விடாமலும் இருக்க வேண்டும். சாதாரண புத்தகங்களின் மொழி பெயர்ப்புகளுக்கே இவ்வளவு எச்சரிக்கை வேண்டும் என்னும் போது ஒரு வேத புத்தகத்தை மாற்று மொழியில் மொழிபெயர்க்கும் போது மொழிபெயர்ப்பவர் மிகவும் உண்மையானவராகவும் இறை அச்சமுடையவராகவும், கவனமுடை யவராகவும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இறைவனின் அருளால் இப்பகுதியில் நாம் குர்ஆனுக்குச் செய்யப் பட்ட மற்ற மொழிபெயர்ப்புகளுடன் மெய்ப் பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டு ஆராய்ந்து வருகிறோம். அவற்றிற்கிடையில் உள்ள வித்தியாசத்தையும் மெய்ப்பிக்கும் தூதரின் மொழிபெயர்ப்பில் உள்ள சிறப்புக்களையும் கண்டு வருகி றோம்.

இவ்விதழில் முஹம்மத் நபியின் மேல் அதீத பக்தி கொண்டு, பற்பல விதங்களில் அவரை இறைவனுடன் இணை வைத்து வணங்கும் முஸ்லிம்கள் அனைவரும் தவறாகப் புரிந்து கொண்டும், துஷ்பிரயோகம் செய்து கொண்டும் உள்ள வசனங்களில் ஒன்றான 21:107 என்ற எண்ணிட்ட வசனத்தை ஆய்வோம்.

### 21:107க்கு ஜான் டிரஸ்ட் மொழிபெயர்ப்பு

(நபியே) நாம் உம்மை அகிலத்தாருக்கெல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட்கொடையாக வேயன்றி அனுப்பவில்லை .

### 21:107 அப்துல் ஹமீது பாக்கவியின் மொழிபெயர்ப்பு

(நபியே) நாம் உம்மை உலகத்தார் யாவருக்கும் ஓர் அருளாகவே அனுப்பியிருக்கிறோம்.

### 21:107ன் நிஜாமுத்தீன் மன்பஈயின் மொழிபெயர்ப்பு

அனைத்து உலகத்தினருக்கும் அருளாகவே தவிர (நபியே!) உம்மை நாம் அனுப்பவில்லை.

மேலும் அனைத்துத் தூதர்களும் அனுப்பப்படுவது இறைவனுடைய கருணையின் வெளிப்பாடு என்று குர்ஆன் கூறுகிறது. (2:150-151, 3:/64) எனவே இறைவன் மனிதர்களுக்கு அனுப்பும் தூதுச் செய்திதான் அருட்கொடையே அன்றி தூதர்கள் அல்லர் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

21:107ன் I F T மொழிபெயர்ப்பு

(நபியே) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்.

**21:107ன் காதியானிகள் மொழிபெயர்ப்பு**

நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பினோம்.

**21:107 Pickthall மொழிபெயர்ப்பு**

We sent thee not save a mercy for the people.

**21:107 Yusuf Ali மொழிபெயர்ப்பு**

We sent thee not, but as a mercy for all creatures.

மேற்கண்ட எல்லா மொழி பெயர்ப்புக்களிலும் 'முஹம்மத் நபியை, அல்லாஹ் அகிலத்தாருக் கெல்லாம் ஓர் அருட்கொடையாக அனுப்பியதாக மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அதாவது முஹம்மத் என்ற மனிதரை உலகங்களுக்கு அருட்கொடையாக இறைவன் அனுப்பினார் என்பதே அம்மொழி பெயர்ப்பின் கருத்து. இப்போது நாம் குர்ஆனின் ஒளியில் ஆராய்வோம். ஏனெனில் நாம் முழு குர் ஆனையும் பின்பற்றும்படி ஏவப்பட்டுள்ளோம். (7:3) வேதத்தின் ஒரு பகுதியை நம்பி மற்றொரு பகுதியை மறுக்கக்கூடாது

எனக் கட்டளையிடப்பட்டுள்ளோம். (2:85)

குர்ஆனில் நாம் இறைவன் மட்டுமே கருணையின் வடிவம் என்று கற்றுக் கொடுக்கப் படுகிறோம். எல்லா வல்லமையும் உள்ள இறைவன் கருணையைத் தன் மேல் விதியாக ஆக்கிக் கொண்டார்' (6:12, 54). மகத்தான இவ்வசனம், தான் நாடியதை யெல்லாம் செய்யக்கூடிய வல்லமை யிருந்தும் தன்னைத் தடுப்பவர் எவருமில்லை என்று அறிந்திருந்தும் படைப்புக்களிடத்தில் கருணையாய் இருப்பதை தன் மேல் விதியாக்கிக் கொண்ட நம் இரட்சகரின் மாபெரும் கருணையை நமக்குக் கூறுகிறது.

மேலும் அனைத்துத் தூதர்களும் அனுப்பப்படுவது இறைவனுடைய கருணையின் வெளிப்பாடு என்று குர் ஆன் கூறுகிறது. (2:150-151, 3:164) எனவே இறைவன் மனிதர்களுக்கு அனுப்பும் தூதுச் செய்திதான் அருட்கொடையே அன்றி தூதர்கள் அல்லர் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்.

மேலும் தூதர்கள் நம்மைப் போன்ற மனிதர்களேயன்றி வேறில்லை. அவர்களுக்கு அனுப்பப் படும் தூதுச் செய்தி மட்டுமே மற்ற மனிதர்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்று குர்ஆன் வலியுறுத்திக் கூறுகிறது. (18:110)

நாம் 3:159 என்ன கூறுகிறது என்பதைப் படித்தோமானால் இவ்வுண்மை நமக்கு மேலும் தெளிவாகும்.

**"இறைவனின் கருணையின் காரணமாகவே நீர் அவர்களிடம் மென்மையாக நடந்து கொள்கிறீர். நீர் கடுகடுப்பானவராகவும், கடின சித்தமுடையவராகவும் இருந்திருப் பீரானால் அவர்கள் உம்மைக் கைவிட்டிருப்பார்கள்".**

தெளிவான குர்ஆனின் மேற் கண்ட வசனம் இறைவனின் கருணையினால்தான் தூதர் மென்மையாக நடந்து கொள்கிறார் என்று கூறும் போது அதற்கு முரணாக மற்றொரு வசனத்தில் தூதுத்துவம் பெற்ற ஒரு மனிதரை இறைவன் உலகின் அருட்கொடை என்று கூறுவாரா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இவ்வசனத்தில் இறைவன் அருட்கொடை என்று கூறுவது முஹம்மத் என்ற தனி மனிதரையா அல்லது அவர் மூலம் அனுப்பப்பட்ட தூதுச்செய்தி யையா? என்பதை நாம் மேலும் குர்ஆன் ஒளியில் ஆராய்வோம்.

முஹம்மத் என்ற மனிதர் உலக மக்கள் அனைவருக்கும் அருட் கொடை என்றால் அவர் தன்னைக் காண வந்த குருடரை விட்டு முகம் திருப்பி அவரைக் கடுகடுத்திருப் பாரா? இச்சம்பவத்தைக் குர்ஆனில் இடம்பெறச் செய்வதன் மூலம் இறைவன் நமக்கு என்ன செய்தி கூறுகிறார் என்பதை நாம் சிந்திக்க வேண்டாமா? இறைவன் அருளிய குர் ஆனில் முரண்பாடுகள் இல்லை

**இறைவன் மட்டுமே கருணை வடிவானவர் அவரைத்தவிர வேறு யாரும் கருணை வடிவானவராக இருக்க முடியாது என்றும் இறைவனின் தன்மைகளில் (ஸி:பத்துக்களில்) அவருக்கு யாரும் எவ்விதத்திலும் இணையானவர்கள் இல்லை என்ற ஓரிறைக் கொள் கையை ஆணித்தரமாகவும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.**

என்றும் அவ்வாறு முரண்பாடுகள் இருந்தால் அது இறைவனிடமிருந்து வந்ததல்ல என்றும் குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது. எனவே குர்ஆனை முரண்பாடாகக் காட்டும் இம்மொழிபெயர்ப்புக்கு இறைவனின் அங்கீகாரமில்லை என்பது விளங்குகிறதல்லவா?

தூதர்களின் தூதுச் செய்திதான் இறைவனின் அருட்கொடையே அன்றி தூதர்கள் அல்ல என்பதற்குக் குர் ஆனில் நாம் மேலும் ஒரு ஆதாரத்தைக் காண்கிறோம். ஆம். வசனம் 19:21 ஈஸா நபியையும் இறைவன் தன்னிடமிருந்து மனிதர் களுக்கு அனுப்பப்பட்ட ஒரு அருட் கொடையாக ஆக்கி வைத்திருக்கிறார் என்று கூறுகிறது. இங்கும் ஈஸா நபியின் தூதுச் செய்திதான் இறைவனின் அருட்கொடையே அன்றி ஈஸா நபி அல்லர். மேலும் இவ்வசனத்திலிருந்து முஹம்மத் நபியின் தூதுச் செய்தி மட்டும் இறைவனின் அருட்கொடை அல்ல, எல்லாத் தூதர்களின் தூதுச் செய்தியும் மனிதர்களுக்கு இறைவன் காட்டிய கருணையின் வெளிப்பாடே என்றும் புரிந்து கொள்கிறோம்..

மேலும் இத்தகைய சில வசனங் களின் கருத்தைத் திரித்துக் கூறி முஹம்மத் நபியை மற்றத் தூதர்களிடமிருந்து பிரித்து, உயர்த்தி வேறுபாடு காட்டுகின்றனர். இன்றைய முஹம்மதிய இணை வைப்பாளர்கள், இது குர் ஆனில் தடுக்கப்பட்டிருக்கும் ஒரு குற்றச்

செயலாகும். எனவே இத்தகைய முரண்பாடுகளைக் கொண்ட மேற்கண்ட மொழிபெயர்ப்புக்கள் அனைத்தும் தவறு என்பதை நாம் உணர்ந்து, அறிந்து கொள்கிறோம்.

இப்போது நாம் இவ்வசனத்திற் குரிய மெய்ப்பிக்கும் தூதரின் சரியான மொழி பெயர்ப்பைக் காண்போம்.

We have sent you out of mercy from us towards the whole world. (21:107)

உம்மை நாம் தூதனுப்பியது கிலாத்தாருக்கெல்லாம் நம்முடைய கருணையின் வெளிப் பாடாகும்.

மேற்கண்ட மொழிபெயர்ப்பு மற்ற மொழிபெயர்ப்புக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பது சிந்திக் கக் கூடியவர்களுக்குத் தெளிவாக விளங்கும். மற்ற மொழிபெயர்ப் புக்கள் இறைவனின் கருணையில் முஹம்மத் நபிக்குப் பங்கிருப்பதைப் போன்ற ஒரு கருத்தைத் தருகின்றன. முஹம்மத் என்ற மனிதர் இறைவனின் கருணை வடிவம் என்ற கருத்தைத் தருகின்றன. ஆனால் மெய்ப்பிக்கும் தூதரின் மொழிபெயர்ப்பு முஹம்மத் நபியின் தூதுச்செய்திதான் இறைவனுடைய கருணையின் வெளிப்பாடு என்று தெளிவாகக் கூறுகிறது. இது இறைவன் மட்டுமே கருணை வடிவானவர் அவரைத்தவிர வேறு யாரும் கருணை வடிவானவராக இருக்க முடியாது என்றும் இறைவனின் தன்மைகளில் (ஸிஃபத்துக்களில்) அவருக்கு யாரும் எவ்விதத்திலும் இணையானவர்கள் இல்லை என்ற ஓரிறைக் கொள் கையை ஆணித்தரமாகவும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

இறைவன் நாடினால்,

(தொடரும்)

**இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் இவர்கள் சிதைத்து வைத்திருக்கும் வசனம் 33:56ன் சரியான மொழிபெயர்ப்பைக் காண்போம்.**

**திருத்தம்**

மார்ச் 2000 இதழில் வெளியான இறைவனின் முத்திரை 19 என்ற கட்டுரையில் ஷஹாதத்பற்றிய அட்டவணையில் (பக்கம் 28) வரிசை எண் 2ல் 18 என்ற எண் தவறுதலாக இருமுறை அச்சாகியுள்ளது. 18 ஒருமுறை மட்டுமே அச்சாகியிருக்க வேண்டும். அவ்வசனத்தில் ஷஹாதத் இருமுறை கூறப்பட்டிருப்பதை தனியே மற்றொரு பட்டியலில் கணக்கிடப்பட்டுள்ளது. வரிசை எண். 14ல் வசன எண்களைக் கூறும் பட்டியலில் 3 என்று அச்சாகியுள்ளது. 6 என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும். தவறுக்கு வருந்துகிறோம்.

# அல்குர்ஆன்
## 19வது மற்றும் இறுதி வேதம்

A.முஹம்மத் அவர்களின் ஓர் ஆய்வு

"இறைவனின் நபிமார்கள் வேதம் கொண்டு வருவார்கள் என்று குர்ஆன் நமக்குக் கூறுகிறது.

'இறைவன் வேதமளிக்கப்பட்ட வர்களை நற் செய்தி கூறுபவர்களா கவும் எச்சரிப் பவர்களாகவும் அனுப்பிய போது மக்கள் ஒரே சமுதாயமாகவே இருந்தனர். அவர், அவர்களுடன் மக்களின் கருத்து வேறுபாடுகளில் தீர்ப்பளிக்க உண்மைகளைக் கொண்ட வேதத்தையும் அனுப்பி வைத்தார்." (2:213, 3:81லும் உறுதிப்படுத்தப் படுகிறது.)

குர்ஆனில் 'வேதம்' (கிதாப்) என்ற பதம் பல வசனங்களிலும் 'நபி' மார்களுடன் இணைத்தே கூறப்படுகிறது.

குர்ஆனில் பெயர் கூறப்பட்டுள்ள நபிமார்களை நாம் எண்ணினால் 20 நபிமார்களை இறைவன் பெயர் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார் என்பதைக் காண்கிறோம். இந்த இருபது பேரில் ஒவ்வொருவரையும் இறைவன் 'ஒரு நபி' என்று குறிப்பிட்டுக் கூறுகிறார்.

அல்அன்ஆம் அத்தியாயத்தின் (அத்:6) 83-86வது வசனங்களில் நாம் இப்றாஹிமில் ஆரம்பித்து லூத்துடன் முடிவடையும் 18 பெயர்களையும் படிக்கிறோம். வசனம் 89 இவர்கள் அனைவரும் 'நபிமார்கள்' என்பதை உறுதி செய்கிறது.

"இவர்கள் அனைவருக்கும் நாம் வேதத்தையும், // ஞானத்தையும் நபித்துவத்தையும் அளித்தோம். அந்த நபிமார்கள் வருமாறு :

1. இப்றாஹீம் (19:41,33:7லும் 'நபி' என்று குறிப்பிடப்படுகிறார்)
2. இஸ்ஹாக் (19:49,37:112லும்)
3. யாக்கூப் (19:49லும்)
4. நூஹ் (33:7லும்)
5. தாவூத் (17:55லும்)
6. சுலைமான்
7. அய்யூப்
8. யூசுஃப்
9. மூஸா (19:51லும் 33:7லும்)
10. ஹாரூன் (19:53லும்)
11. ஜக்கரிய்யா
12. யஹ்யா
13. ஈஸா (19:30, 33:7லும்)
14. இல்யாஸ்
15. இஸ்மாயில்
16. அல்யஸவு (எலிஷா)
17. யூனுஸ்
18. லூத்

இத்துடன் மேலும் குர் ஆன் கூறும் இரு நபிமார்களின் பெயர்களை நாம் சேர்த்தால்

19. இத்ரீஸ் (19:56ல் நபி என்று குறிப்பிடப்படுகிறார்)

20. முஹம்மத் (33:40ல் இறுதி நபி' என்று உறுதிப்படுத்தப்படு கிறார். குர்ஆனில் 20 நபிமார்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகிறது என்பதை நாம் கண்டோம்.

ஆயினும், மூஸா, ஹாரூன் ஆகிய இரண்டு நபிமார்களுக்கும் ஒரே வேதமே கொடுக்கப்பட்டது என்று குர்ஆன் கூறுகிறது.

வேதம் எனும் சட்ட புத்தகம் மூஸா, ஹாரூன் ஆகிய இருவருக்கும் கொடுக்கப்பட்டது. (37:117 மற்றும் 21:48) எனவே இருபது நபிமார்களுக்கும் கொடுக்கப்பட்ட வேதங்களின் எண்ணிக்கை பத்தொன்பது. இதன் மூலம் குர் ஆனில் நபிமார்கள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் 20 பேரும் கொண்டு வந்த எல்லா வேதங்களின் எண்ணிக்கை 19 என்று நாம் அறிந்து கெள்கிறோம்.

வேறு சிலரும் குர் ஆனில் குறிப் பிடப்படுகிறார்கள். ஆனால் நபி என்றோ வேதம் கொடுக்கப்பட்டவர் என்றோ அல்ல. அவர்கள், ஆதம் (3:33ல் தேர்ந்தெடுக்கப்பட்டவர்' என்று கூறப்படுகிறார், நபி என்று அல்ல) ஹுௗத், ஸாலிஹ், மற்றும் ஷுௗஐபு (இவர்கள் முறையே 26:125, 143, 178 ஆகிய வசனங்களில் தூதர்கள் (ரஸுௗல்) என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

துல் - கிஃப்லு (21:85, 38:48ல் உறுதியானவர், பொறுமைமிக்கவர், நேர்மையானவர் என்று வர்ணிக்கப் படுகிறார் லுக்மான் (31:12ல் ஞானம் அளிக்கப்பட்டவர் என்று குறிப்பிடு கிறார்).

மேற்கூறிய நல்லடியார் எவரையும் வேதம் என்ற பதத்துடன் இணைத்து குர் ஆன் எங்கும் கூறவில்லை . இவர்களில் யாரும் வேதம் கொண்டு வரவில்லை. எனவே 2:213ன்படி இவர்களில் நபிமார்கள் அல்லர். இவர்கள் அறுவரில் மூவர் தூதர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள் (ஹுௗத், ஸாலிஹ், ஷுௗஐப்) மற்ற மூவரும் (ஆதம், துல்கிஃப்லு, லுக்மான்) இறைவனின் அருள் பெற்றவர்கள் என்று கூறப்படுகின் றனர்.

குர்ஆனில் நமக்குக் கூறப்படாத எத்தனையோ 'தூதர்களை' இறைவன் முந்திய காலங்களில் அனுப்பி உள்ளதாக குர் ஆன் நமக்குத் தகவல் தருகிறது.

"உமக்கு முன்னர் நாம் தூதர்களை அனுப்பி இருக்கிறோம். அவர்களில் சிலரைப் பற்றி நாம் கூறி இருக்கிறோம், சிலரைப் பற்றி நாம் கூறவில்லை (40:78,4:164)

ஆயினும், இத்தகவலைத் தரும் இரு வசனங்களும் தூதர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறதே அன்றி நபிமார்களைப் பற்றி அல்ல.

எனவே மேற்கண்ட ஆய்வின்படி இறைவன் மனித சமூகத்திற்கு குர்ஆனை 19வதுவேதமாக அனுப்பி இருக்கிறார் என்று நாம் உறுதிப்படுத்தப்படுகிறோம்.

# இறைவனுக்குக் கட்டுப்படுங்கள் தூதருக்குக் கட்டுப்படுங்கள்

இறைவன் தன் இறுதி வேதமான பாதுகாக்கப்பட்ட அல்குர் ஆனில் பல வசனங்களில் அல்லாஹ்வும், தூதரும்; அல்லாஹ்வுக்கும் தூதருக்கும்; என்று வரிசைப்படுத்துகிறார். ஓரிறைக் கொள்கையையே சாரமாகக் கொண்ட அல்குர் ஆனின் உண்மை யான மாணவர்கள் இதற்கு அல்லாஹ்வுடன் சேர்த்துக் கூறப்படு வதால் அல்லாஹ்வும் தூதரும் ஒன்று என்றெண்ணிக் கொள்ளமாட்டார் கள். இணைவைக்கும் மனோபாவ முள்ள மனிதர்கள் மட்டுமே அவ்வாறு அர்த்தம் கொள்ள முடியும். இறைவன் இறைவனும், தூதரும் நம்பிக்கை கொண்டவர்களும், என்றும் இறைவனுக்கும், தூதருக்கும், உங்கள் அதிகாரிகளுக்கும் என்றும் கூறுவது இங்கே நினைவு கூரத்தக்கது.

இறைவனுக்குக் கட்டுப்படுங்கள் தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்று இறைவன் கூறுவது தூதுத்துவத்தை வலியுறுத்தல் செய்யவே அன்றி இருவரும் இணை என்று கூறுவதற் கல்ல .

இறைவன் கொடுத்த நிலைமைக்கு மேலாகவோ, குர் ஆனுக்கு முரணா. கவோ தூதர் எதுவும் கூறமாட்டார். இறைவனின் தூதை தூதர் எத்திவைப்பார். அந்தத் தூதர் கொண்டு வரும் தூதுக்குக் கட்டுப்படுவதன் மூலம், நீங்கள் இறைவனுக்குக் கட்டுப்படுங்கள் என்று குர் ஆன் கூறுகிறதே அன்றி இறைவன் ஒன்று கூறுவார், அது அல்லாமல் தூதர் ஒன்று கூறுவார். நீங்கள் இரண்டுக்கும் கட்டுப்படுங்கள் என்று அல்ல.

**அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள் தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்று இறைவன் கூறுவது தூதுத்துவத்தை வலியுறுத்தல் செய்யவே அன்றி இருவரும் இணை என்று கூறுவதற்கல்ல.**

“அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். தூதருக்குக் கட்டுப் படுங்கள். எச்சரிக்கையாக இருங்கள், நீங்கள் புறக்கணித்தால் தூதரின் கடமை தூதைத் தெளிவாக எத்திவைப்பதன்றி வேறில்லை .”

தூதர் எப்பொழுதும் தூதுடன் மட்டுமே இணைத்துக் கூறப்படுகிறார்.

எனவே நாம் முழுமையாகக் கட்டுப்பட வேண்டியது தூதுக்குத்தானே அன்றி முஹம்மத் என்ற மனிதருக்கல்ல.

அல் ஹாக்கா (69) அத்தியாயத் தின் 44 முதல் 47 வரை உள்ள வசனங்கள் நபியைப் பற்றிக் கூறுகிறது.

(44) நம்மீது பொய்யாக எதையேனும் இட்டுக்கட்டி அவர் கூறியிருப்பாரானால் (45) நாம் அவரைக் கடுமையாகத் தண்டித் திருப்போம். (46) மேலும், வேத வெளிப்பாட்டை அவருக்கு நிறுத்தி இருப்போம் (47) உங்களில் யாரும் நம்மிடமிருந்து அவரைப் பாதுகாக்க முடியாது.

மேற்கண்ட வசனங்கள் ஹதீஸ் குத்ஸி என்று அழைக்கப்படும் பொய்களை நமக்கு அடையாளம் காட்டுகிறது. குர் ஆன் அல்லாத எதையும் தூதர் நமக்குத் தரவில்லை . பின்பற்றும்படி கூறவும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

தூதருக்கு எப்படிக் கட்டுப் படுவது? யூனுஸ் (10) அத்தியாயத் தின் வசனம் 15 இதற்கு விடையளிக்கிறது.)

‘‘நம்முடைய தெளிவான வசனங்கள் நம்மைச் சந்திப்பதை எதிர்பார்க்காதவர்களிடம் ஓதிக் காண்பிக்கப்பட்டால், 'இது 'அல்லாத குர்ஆனைக்' கொண்டு வாரும், அல்லது. இதை மாற்றி விடும்' என்று கூறுகிறார்கள். கூறும்: நான் என்னிஷ்டப்படி இதை மாற்றிவிட முடியாது. எனக்கு என்ன வஹீயாக அருளப்படுகிறதோ அதையே நான் பின்பற்றுகிறேன்."

தெளிவான இவ்வசனம் குர்ஆன் அல்லாத எதையும் கூற தூதருக்கு உரிமை இல்லை என்று கூறுகிறது. 'இது அல்லாத குர்ஆன், என்றும், அல்லது இதை மாற்றும்படியும் நிராகரிப்போர் கூறுவதிலிருந்து இது தெளிவாகிறது. முந்திய தூதர்களையும், நபிமார்களையும் போலவே முஹம்மத் நபியும் அவர் கொண்டு வந்த தூதுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டியவர். தூதை மட்டுமே எத்தி வைக்கக் கடமைப்பட்டவர். வசனம் 24:54 கூறுகிறது.

' ' இறைவனுக்குக் கட்டுப்படுங்கள். தூதருக்குக் கட்டுப் படுங்கள். எச்சரிக்கையாக இருங்கள், நீங்கள் புறக்கணித்தால் தூதரின் கடமை தூதைத் தெளிவாக எத்திவைப்பதன்றி வேறில்லை."

தூதர் எப்பொழுதும் தூதுடன் மட்டுமே இணைத்துக் கூறப்படு கிறார். எனவே நாம் முழுமையாகக் கட்டுப்பட வேண்டியது தூதுக்குத் தானே அன்றி முஹம்மத் என்ற மனிதருக்கல்ல.

குர்ஆனைத் தவிர வேறு எதையும் இவ்வுலகிற்கு முஹம்மத் நபி தரவில்லை (6:19) குர் ஆனை மட்டுமே நாம் நபியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதை மட்டுமே நம் வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்பதைக் குர் ஆன் இரு கருத்துக்கிடமின்றிக் கூறுகிறது. இந்தக் குர் ஆனைக் கொண்டுதான் தூதர் நம்மை எச்சரிக்கிறாரே அன்றி இது அல்லாத வேறு எதையும் கொண்டு அல்ல.

இவ்வசனங்களுக்கு யாருடைய விளக்கமோ விரிவுரையோ தேவையில்லை. இறைவனின் வார்த்தைகள் சத்தியத் தாலும், நீதத்தாலும் பூர்த்தியாகி விட்டது. ஸீக்ருப் அத்தியாயத்தின் 44 வது வசனம் கூறுவது: 'இது உமக்கும், உம் சமூகத்தாருக் கும் உள்ள நினைவூட்டலாகும். நிச்சயமாக நீங்கள் இது குறித்து விசாரிக்கப்படுவீர்கள்."

தூதரையும் சரி, நம்மையும் சரி, குரஆனைப் பின்பற்றினோமா இல்லையா என்று தான் இறைவன் விசாரிப்பாரே அன்றி அது அல்லாத வேறு எது குறித்தும் அல்ல, என்று இந்த வசனம் நமக்கு அறிவுறுத்துகிறதல்லவா?

☆ ★ ☆

# ஹதீஸ்களின் அவல நிலை

## பொய்களை இட்டுக்கட்டிய

## புகாரியும் அபூஹுரைராவும்

பெரும்பான்மையான முஸ்லிம்கள், குர் ஆனை விளக்குவதற்கும், அதைத் தெளிவு செய்வதற்கும், அது மௌனமாக இருக்கும் இடங்களை விவரிப்பதற்கும் ஹதீஸ்கள் அவசியம் என்று கருதவும் கூறவும் செய்கின்றனர். ஆனால் குர் ஆன் தன்னைத் தெளிவானது, (22:16) விளக்கமானது, (6:115) விவரிக்கப்பட்டது (6:114) என்று கூறுகிறது.

ஹதீஸ்கள் ஒரு கலை என்றும், விஞ்ஞான பூர்வமானது என்றும் அதன் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். ஆயினும் ஒரு கலைக்குரிய இலக்கணங்களுக்கோ அல்லது, விஞ்ஞான ரீதியான சோதனை களுக்கோ ஹதீஸ்கள் உட்பட்டவை அல்ல. அத்தகைய சோதனைகள் செய்யப்பட்டால் ஹதீஸ்கள் பொய்கள் என்பதே நமக்குக் கிட்டும் முடிவாக இருக்கும்.

முஹம்மத் நபியால் தடை செய்யப்பட்ட குர் ஆன் அல்லாத இந்த ஹதீஸ்கள் (செய்திகள்) அவருக்குப் பின் வந்த நான்கு நேர்வழி பெற்ற கலீஃபாக்களாலும் தடை செய்யப்பட்டிருந்தது.

நபியால் விதிக்கப்பட்ட இத்தடை உமர் இப்னு அப்துல் அஸீஸின் ஆட்சிக்காலம் வரை நீடித்தது. புகழ்பெற்ற உமர் இப்னுல் கத்தாபின் கொள்ளுப் பேரனான இந்த 2ம் உமர் பல சீர்திருத்தங்களைச் செய்த மிக நல்ல மனிதர் என்று புகழப்பட்டவர். முதலில் அவர் அலீ இப்னு அபூதாலிபை பொதுமேடைகளில் இகழ்வதையும் சாபமிடுவதையும் தடுத்தார். - இவ்வழக்கம் முஆவியா இப்னு அபூஸுஃப்யானால் நுழைக்கப்பட்ட ஒரு கீழ்த்தரமான செயலாகும். - மேலும் நபித் தோழர்களைப் பற்றி மக்கள் செய்து கொண்டிருந்த விவாதங்களையும், சர்ச்சைகளையும் அவர் தடுத்தார். எந்த நபித் தோழரும் இகழப்படக் கூடாது மாறாக புகழப்பட வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார்.

மேலும் ஹதீஸ்களை எழுதிக் கொள்ள விதிக்கப்பட்ட தடையையும் அவர் நீக்கினார். இது அவர் செய்த மிகப்பெரும் தவறாகும். ஹதீஸ்கள் எழுதிக்கொள்ளப்படுவதன் மூலம் உண்மையையும், பொய்யையும் தனித்தனியாகப் பிரித்து விடலாம் என்று அவர் கருதி இருக்கலாம் ஆனால் அவ்வாறு நடக்கவில்லை என்பதே இஸ்லாமிய வரலாறு

**முஹம்மத் நபியால் தடை செய்யப்பட்ட குர்ஆன் அல்லாத இந்த ஹதீஸ்கள் (செய்திகள்) அவருக்குப் பின் வந்த நான்கு நேர்வழி பெற்ற கலீஃபாக்களாலும் தடைசெய்யப் பட்டிருந்தது.**

நமக்குக் கூறும் உண்மை . நல்ல எண்ணங்களால்தான் நரகிற்குப் பாதை அமைக்கப்படுகிறது என்ற ஆங்கிலப் பழமொழி இங்கே நினைவுகூரத்தக்கது.

இங்கே சில கசப்பான உண்மைகளையும் நாம் நினைவுகூர வேண்டும். நபியின் மரணத்திற்குப் பின் அவருடன் இருந்த தோழர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் தோன்றின. அவர்கள் ஒருவருக்கொருவர் எதிரா கச் சதிகளும், சூழ்ச்சிகளும் செய்து கொண்டனர். தங்களுக்கிடையில் பிரிவினைகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாக உதுமான் இப்னு அஃப்பான் கொல் லப்பட்டார். மேலும் சில நபித்தோழர்கள் (நபியின் மனைவியான ஆயிஷா உட்பட) மற்ற நபித்தோழர்களான அலீ இப்னு அபூதாலிப்புக்கும் அவரை ஆதரித்தவர்களுக்கும் எதிராக போர் புரிந்தனர் தொடர்ந்து அலீயும் கொல்லப்பட்டார்.

நபித்தோழர்கள் யாரும் மேடைகளில் இகழப்படக்கூடாது, மாறாக புகழப்பட வேண்டும் என்ற 2ம் உமரின் கட்டளை மற்றொரு விளைவையும் உண்டாக்கியது. ஆம்! அதன் மூலம் நபித்தோழர்கள் தவறுகள் செய்ய முடியாத புனிதர்கள் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் விதைக்கப்பட்டது. இதன் நீண்டகால விளைவாக, ஹதீஸ்களைப் பதிவு செய்த கயவர்களுக்கு, அவர்களின் பொய்களுக்கு ஆதாரமாக இந்த நபித்தோழர்களின் பெயர்கள் உதவியது. அவர்கள் கூறும் பொய்களுக்கு ஆதாரமாக நபித் தோழர்களின் பெயர்கள் பயன்படுத் தப்பட்டன.

இத்தகைய நிர்பந்த நிலைக்கு ஆளாகாத சரித்திர ஆசிரியர்களான அத்தபரீ, இப்னுல் அதீர் போன்றவர்கள் சஹாபாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களின் இருண்ட பக்கங்களைப் பதிவு செய்து உள்ளனர். நபித்தோழர்களில் பலர், (உதுமான் உட்பட) உதுமானின் ஆட்சிக்காலத்தில் ஏராளமான பொருள்களைச் சேர்த்து வைத்ததை அது கூறுகிறது. அபூ ஹீரைரா பஹ்ரைனின் ஆளுநராக இருந்த போது அடித்த கொள்ளையைப் பற்றிய ஆதாரங்களை நாம் முந்தைய இதழ்களில் கண்டோம்.

சில ஸஹாபாக்கள் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆனார்கள். சிலர் விபசாரக் குற்றம்

சாட்டப்பட்டார்கள். எல்லா நபித் தோழர்களும் இவ்வாறு நபியின் தோழமையைத் தவறாகப் பயன் படுத்தவில்லை . அபூபக்கர், உமர், அலி போன்ற பலர் நல்ல மனிதர்களாகவும், இறையச்சம் உடையவர்களாகவும், நபியுடன் அவர்கள் கொண்டிருந்த தோழமையை மிகவும் மதித்தவர்களாகவும் இருந்தனர். அதைக் கொண்டு எந்தச் சுயலாபத்தையும் அடையாதவர்களாகவும் இருந்தனர்.

2ம் உமரின் கட்டளையால் எல்லா நபித்தோழர்களும் நல்லவர்களாகவும், கேள்விகளுக்கும், விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டவர்களாகவும் கருதப்பட ஆரம்பித்தனர். இதன் மிகத்தீய விளைவு என்னவென்றால், இதன் மூலம் அபூபக்கரின் வார்த்தைகளுக்கும், அபூ ஹீரைராவின் வார்த்தைகட்கும் ஒரே விதமான மதிப்புக் கிடைக்க ஆரம்பித்தது.

ஹதீஸ் புத்தகங்களில், சுயநலவாதியான அபூ ஹுரைரா, விபசாரனான அல் முகீரா இப்னு ஷீஃபா, கொலைகாரனான காலித் பின் வலீத் (இவருக்கும் உமருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மிகவும் பிரசித்தி பெற்றது) மிகப்பெரும் பொய்யனான அம்ருப்னுல் ஆஸ் ஆகியோர் அறிவித்த செய்திகள் ஏராளமாக விரவிக்கிடக்கின்றன. இந்த அம்ருப்னுல் ஆஸ் அலீக்கு எதிரான உள்நாட்டுக் கலகத்தில் முக்கிய பங்காற்றியவர்). இத்தகையவர்களின் பெயர் கூறப்படும்போது,

**சில ஸஹாபாக்கள் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆனார்கள். சிலர் விபசாரக் குற்றம் சாட்டப்பட்டார்கள். எல்லா நபித் தோழர்களும் இவ்வாறு நபியின் தோழமையைத் தவறாகப் பயன் படுத்தவில்லை . அபூபக்கர், உமர், அலி போன்ற பலர் நல்ல மனிதர்களாகவும், இறையச்சம் உடையவர்களாகவும், நபியுடன் அவர்கள் கொண்டிருந்த தோழமையை மிகவும் மதித்தவர்கள். ஆகவும் இருந்தனர். அதைக் கொண்டு எந்தச் சுயலாபத்தையும் அடையாதவர்களாகவும் இருந்தனர்.**

'இறைவன் அவர்களைப் பொருந்திக் கொள்ளட்டும்' (ரலியல்லாஹீ அன்ஹீ) என்ற சொற்றொடருடன் சேர்த்தே கூறப்படுகிறது.

பற்பல அளவுகளில் நம்பிக்கைக் குரியதாகவும், தரம் கொண்டதாகவும் ஹதீஸ் புத்தகங்கள் கருதப்படு கின்றன. இவற்றில் ஆறு புத்தகங்கள் 'குது பஸ்ஸஹாஹ் என்றும் ஸஹீஹ் ஸித்தா என்றும் அழைக்கப்படு கின்றன. இவை அனைத்தும் பொதுவாக 'ஸஹீஹ்' (உண்மை யானது, சரியான தொடர்புடையது) என்று கருதப்படுகின்றன.

இவற்றில் மிகவும் நம்பிக்கைக் குரியதாகவும், அதிகார பூர்வமான தாகவும் கருதப்படுவது முதலில் எழுதப்பட்ட அல்புகாரியின் தொகுப்பாகும். அவரைத் தொடர்ந்து அவரின் மாணவரான முஸ்லிம், பின்னர், திர்மிதி, நஸஈ, இப்னு மாஜா, அஹ்மத் இப்னு ஹன்பல் ஆகியோரின் தொகுப் புக்களும் நம்பிக்கைக் குரியதாகக் கருதப் படுகின்றன.

சில ஹதீதுக்கலை அறிஞர்கள் புகாரி, முஸ்லிம் ஆகிய இருவரின் தொகுப்புக்களை மட்டும் 'ஸஹீ ஹைன்' (நம்பிக்கைக்குரிய இரண்டு தொகுப்புக்கள்) என்று கூறி மற்ற நான்கையும் 'ஹஸன்' (அழகானது) என்று வகைப்படுத்துவர்.

அல்புகாரி (194-256AH; 810-870AD) இத்தொகுப்பை நபியின் மரணத்திற்குப் பின் 200 வருடங்கள் கழித்துப் பதிவு செய்தார். அவர் ஆறு லட்சம் ஹதீஸ்களைச் சேகரித்து, ஆய்வு செய்து அவற்றைத் தரம் பிரித்ததாகக் கூறுகிறார். அவற்றில் 7600 மட்டுமே நம்பிக்கைக்குரியது என்று அவர் கருதினார். அவற்றில் திரும்பத் திரும்பக் கூறப்படும் ஹதீஸ்களைக் கழித்தால் 4000க்குக் குறைகிறது. மேலும், நாம் புகாரியின் சொந்தக் கூற்றுக்களை ஆராய்வோம்.

புகாரி, தான் 1000க்கும் அதிக மான ஆசிரியர்களிடம் பயின்ற தாகவும், அவர் சேகரித்த ஆறு லட்சம் ஹதீஸ்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஹதீஸ் களை மனனம் செய்திருந்ததாகவும் கூறுகிறார். அவருக்கு உதவியாளர்கள் யாரும் இருந்ததாக நமக்குக் கூறப்பட வில்லை. இப்போது நாம், அவர் ஒரு ஹதீஸை ஆய்வு செய்ய ஒரு மணிநேரம் மட்டும் எடுத்துக் கொண்டார் என்று வைத்துக் கொள்வோம். இப்படி வைத்துக் கொண்டாலும் அவர் வேறு வேலை எதுவும் செய்யாமல் தொடர்ந்து (Non Stop) 70 ஆண்டுகள் செய்திருக்க வேண்டும். ஆனால் அவர் வாழ்ந்ததே 60 ஆண்டுகள் தான்!

அக்காலத்தில் ஹதீஸ்களை 'ஆய்வு' செய்வது என்பது மிகவும் கடினமான ஒன்று என்பதை நாம்

அறிந்திருக்கிறோம். அது நேரம் பிடிக்கக் கூடியதாகவும், எளிதில் செய்ய முடியாததாவும் இருந்திருக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு ஹதீஸையும் நபியின் காலம் வரை சரி பார்க்க வேண்டும். இதற்கிடையில் மிக நீண்ட அறிவிப்பாளர் சங்கிலியை(!)யும் பரிசீலிக்க வேண்டும். மெய்யாகவே அறிவிப் பாளர்கள் 'அந்த' சம்பவம் நடக்கும் போது அங்கே இருந்தாரா, அவர் நல்லவர் தானா, சரியான கொள்கை உடையவர்தானா, அறிவு நுட்பம் உள்ளவர்தானா, பைத்தியம் பிடிக்காதவர்தன, உண்மை கூறுபவர்தானா, எல்லாவற்றிற்கும் மேலாக 'ஞாபக சக்தி' உடையவர் தானா (இதைக் கண்டு பிடிக்க அவர் எந்த அளவுகோலைப் பயன்படுத் தினார் என்று நமக்குத் தெரியாது) என்பதையெல்லாம் ஆய்வு செய்ய, ஆராய வேண்டும். இதை யெல்லாம் செய்வதற்கு ஒரு ஹதீஸிற்கு ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக ஆகும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது அல்லவா? தவிரவும் ஒவ்வொரு ஹதீஸிலும் ஆறு அல்லது ஏழு. அல்லது அதற்கும் அதிகமான தலைமுறைகளைச் சேர்ந்த நபர்களைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும் இதில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் இறந்து போனவர்கள்! ஹதீஸ்களைப்

**ஷரீஅத்' எனப்படும் இஸ்லாமியச் சட்டம் இப்புத்தகங்களில் உள்ள ஹதீஸ் களின் அடிப்படையில் அமைக்கப் பட்டது. இதை அவர்கள் 'சுன்னத்' என்று கூறுகிறார்கள். இவற்றை ஒருவர் மறுப்பதை விட்டு விடுங்கள், பின்பற்றாமலிருந்தாலே அவர் மார்க்கத்தை விட்டு வெளியேறியவர் 'முர்த்தத்' என்று கூறப்படுகிறார். இதற்கு ஹதீஸ்களில் கூறப்படும் தண்டனை மரண தண்டனைதான்! ஆனால் குர்ஆன் மார்க்கத்தை விட்டு வெளியேறியவர்களுக்கு இவ்வுலகில் எந்தத் தண்டனையும் விதிக்க வில்லை. சூரா 2 அல்பகறாவின் 256ம் வசனம் கூறுகிறது.**

பதிவு செய்வது என்பது எத்தகைய பணி என்பதை நம்மால் ஓரளவுக்கு உணர முடிகிறது!

இந்த இடத்தில் நமக்கு ஒரு நியாயமான கேள்வி எழுகிறது. உண்மையிலேயே புகாரி இவ்வாறெல்லாம் செய்திருக்கச் சாத்தியம் இருக்கிறதா? இதன் தெளிவான விடை, நிச்சயம் இல்லை என்பதுதான்.

இதுதான் உண்மை என்றாகி விட்டால் புகாரியின் சொந்தக் கூற்றுக்களே சந்தேகத்திற்கிடமாகி விடுகிறது. சரி இவ்வாறெல்லாம் அவர் செய்தார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது, அவர் இவ்வேலைகளை கவனத்துடன், ஒழுங்காகச் செய்திருக்க முடியுமா என்றால் இதற்கும் விடை நிச்சயமாக இல்லை என்பதுதான்! அவர் இவ்வேலையைப் பதினாறு ஆண்டு களில் முடித்ததாக அவர் கூறுகிறார். அப்படியென்றால் அவர் ஒரு ஹதீஸுக்கு 15 நிமிடத்திற்கும் குறைவாகவே அவர் செலவழித் திருக்க வேண்டும். (இதில் ஒவ்வொரு ஹதீஸையும் பதிவு செய்வதற்கு முன் அவர் தொழுததாகக் கூறும் இரண்டு ரக்அத் 'நபில்' தொழுகையை நாம் கணக்கில் எடுக்கவில்லை) இக்கேள்விகள் அடிப்படை யிலானவை, பிரச்னையின் ஆணிவேர் சம்பந்தப் பட்டவை. ஹதீஸ்களை ஒரு கலை என்றும் விஞ்ஞான முறையிலானது என்றும் கூறும் இஸ்லாமிய அறிஞர்கள் ஏன் இக்கேள்விகளைச் சிந்திக்கவில்லை என்பது உண்மை யில் நமக்கு பெரும் புதிராகவே உள்ள து.

இதைவிடப் பெரிய விஷயம் என்னவென்றால் புகாரிக்கும், மற்ற ஹதீஸ் அறிஞர்களுக்கும் இவர்கள் கொடுக்கும் மதிப்பு! 'ஷரீஅத்' எனப்படும் இஸ்லாமியச் சட்டம் இப்புத்தகங்களில் உள்ள ஹதீஸ் களின் அடிப்படையில் அமைக்கப் பட்டது. இதை அவர்கள் 'சுன்னத்' என்று கூறுகிறார்கள். இவற்றை ஒருவர் மறுப்பதை விட்டு விடுங்கள், பின்பற்றாமலிருந்தாலே அவர் மார்க்கத்தை விட்டு வெளியேறியவர் 'முர்த்தத்' என்று கூறப்படுகிறார். இதற்கு ஹதீஸ்களில் கூறப்படும் தண்டனை மரண தண்டனைதான்! ஆனால் குர்ஆன் மார்க்கத்தை விட்டு வெளியேறியவர்களுக்கு இவ்வுலகில் எந்தத் தண்டனையும் விதிக்க வில்லை. சூரா 2 அல்பகறாவின் 256ம் வசனம் கூறுகிறது.

"மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இருக்கக் கூடாது. நேரான வழி தவறான வழியிலிருந்து இப்போது பிரித்துக் காட்டப்பட்டு விட்டது", யார் ஷைத்தானை நிராகரித்து இறைவன்மேல் நம்பிக்கை கொள் கிறாரோ அவர் உறுதியான பிடிமானத்தில் இருக்கிறார். அது ஒரு போதும், அறுந்து போகாது. இறைவன் கேட்பவர், அறிந்தவர்."

★☆★

# கேள்வி பதில்கள்

**கேள்வி**: தங்கள் ஜனவரி 2000 இதழில் **'தஹஜ்ஜத் தொழுகை'** இல்லை என்று எழுதி இருக்கிறீர்கள். ஆனால் குர்ஆனில் 17:79, 73:2-4, 6, 76:26 வசனங்களில் தஹஜ்ஜத் தொழுகை பற்றிச் சொல்லப்பட்டுள்ளது என்று தர்ஜீமா குர்ஆனில் உள்ளது. சரியான பதிலை 8 எனக்கு எழுதவும்.

**மஸ்தான். பீ.** விழுப்புரம்.

**பதில்** : இன்று குர்ஆனுக்குப் பல தமிழ் மொழிபெயர்ப்புக்கள் இருந் தாலும், அவை அனைத்தும் ஹதீஸ்களின் அடிப்படையிலேயே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. எனவே ஹதீஸ்களுக்குத் தோதாக குர்ஆன் வசனங்களை வளைத்தும், திரித்தும் சிதைத்தும் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பாகவே அவை அனைத்தும் உள்ளன. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் வசனங்கள் தஹஜ்ஜத் 'தொழுகை' என்ற ஒன்றைக் குறிப்பது போல் உள்ளதற் கும் இதுவே காரணம்.

நிச்சயமாகத் தொழுகை நம்பிக் கையாளர்கள் மீது நேரம் குறிப்பிடப் பட்ட கடமையாக உள்ளது என்ற ஒரு இறைவசனம் நமக்குப் பல செய்திகளைக் கூறுகிறது.

1. நிச்சயமாகத் தொழுகைகள் அந்த அந்த நேரங்களில் தொழப்பட வேண்டும். நேரம் கழிந்த பின்னரோ (களாவாகவோ) அல்லது சேர்த்துத் தொழுவதோ, (ஜம்வு) கூடாது.

2. நிச்சயமாகத் தொழுகை என்பது கடமையான தொழுகைகள் மட்டுமே. அது அல்லாத தொழுகை கள் வேறு எதுவும் இல்லை. ஏனெனில் தொழுகைகள்

**(தொடர்ச்சி 27ம் பக்கம் பார்க்க)**

## Purpose of The Heifet

## பசுங்கன்றின் நோக்கம்

وَ اِذْ قَتَلْتُمْ نَفْسًا فَادّٰرَءْتُمْ فِيْهَا ۚ وَاللّٰهُ مُخْرِجٌ مَّا كُنْتُمْ تَكْتُمُوْنَ

72. You had killed a person, then disputed among yourselves. God was to expose what you tried to conceal.

72. நீங்கள் ஒரு மனிதனைக் கொன்று விட்டீர்கள், பின்னர் உங்களுக்கிடையில் தர்க்கித்தீர்கள். நீங்கள் மறைக்க முயன்றதை கடவுள் வெளிப் படுத்த இருந்தார்.

فَقُلْنَا اضْرِبُوْهُ بِبَعْضِهَا ؕ كَذٰلِكَ يُحْىِ اللّٰهُ الْمَوْتٰى ۙ وَيُرِيْكُمْ اٰيٰتِهٖ لَعَلَّكُمْ تَعْقِلُوْنَ

73. We said, "Strike (the victim) with part (of the heifer)." That is when God brought the victim back to life, and showed you His signs, that you may understand.

73. நாம் கூறினோம், (பசுங்கன்றின்) பகுதியைக் கொண்டு (பலியானவரை) அடியுங்கள். அத்தருவாயில்தான் பலியானவரைக் கடவுள் மீண்டும் உயிருடன் கொண்டு வந்தார், மேலும் நீங்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு, தன்னுடைய அத்தாட்சிகளை உங்களுக்குக் காட்டினார்.

ثُمَّ قَسَتْ قُلُوْبُكُمْ مِّنْ بَعْدِ ذٰلِكَ فَهِىَ كَالْحِجَارَةِ اَوْ اَشَدُّ قَسْوَةً ؕ وَاِنَّ مِنَ الْحِجَارَةِ لَمَا يَتَفَجَّرُ مِنْهُ الْاَنْهٰرُ ؕ وَاِنَّ مِنْهَا لَمَا يَشَّقَّقُ فَيَخْرُجُ مِنْهُ الْمَآءُ ؕ وَاِنَّ مِنْهَا لَمَا يَهْبِطُ مِنْ خَشْيَةِ اللّٰهِ ؕ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ

74. Despite this, your hearts hardened like rocks, or even harder. For there are rocks from which rivers gush out. Others crack and release gentle streams, and other rocks cringe out of reverence for God. God is never unaware of anything you do.

74. இதன் பின்னரும், உங்களுடைய இதயங்கள் பாறைகளைப் போன்று கடினமாகிவிட்டன, அல்லது அதை விடவும் கடினமாயின. ஏனெனில் அதிலிருந்து ஆறுகள் பொங்கி எழுகின்ற பாறை களும் உள்ளன. மற்றவை வெடித்து மெல்லிய ஓடைகளை வெளியிடுகின்றன, மேலும் மற்ற பாறைகள் கடவுள் மீதுள்ள பக்தியின் காரணத் தால் உருண்டு விழுந்து விடுகின்றன. நீங்கள் செய்கின்ற எந்த ஒன்றையும் கடவுள் ஒருபோதும் அறியாதிருப்பவர் அல்லர்.

## Distoriting the Word of God

## இறைவனின் வார்த்தைகளைச் சிதைத்தல்

اَفَتَطْمَعُوْنَ اَنْ يُّؤْمِنُوْا لَكُمْ وَقَدْ كَانَ فَرِيْقٌ مِّنْهُمْ يَسْمَعُوْنَ كَلَامَ اللّٰهِ ثُمَّ يُحَرِّفُوْنَهٗ مِنْ بَعْدِ مَا عَقَلُوْهُ وَهُمْ يَعْلَمُوْنَ

75. Do you expect them to believe as you do, when some of them used to hear the word of God, then distort it, with full understanding thereof, and deliberately?

75. அவர்களில் சிலர் கடவுள்-ன் வார்த்தையைச் செவியேற்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்து விட்டு, அதனைப் பற்றி முழுமையான புரிந்து கொள்ளுதலுடன், நன்கறிந்து கொண்டே அதனைச் சிதைப்பவர்களாக இருக்கும் பொழுது, உங்களைப் போல் அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா?

## Concealing the Word of God

## இறை வார்த்தைகளை மறைத்தல்

وَاِذَا لَقُوْا الَّذِيْنَ اٰمَنُوْا قَالُوْآ اٰمَنَّا وَاِذَا خَلَا بَعْضُهُمْ اِلٰى بَعْضٍ قَالُوْآ اَ تُحَدِّثُوْنَهُمْ بِمَا فَتَحَ اللّٰهُ عَلَيْكُمْ لِيُحَآجُّوْكُمْ بِهٖ عِنْدَ رَبِّكُمْ اَفَلَا تَعْقِلُوْنَ

76. And when they meet the believers, they say, "We believe," but when they get together with each other, they say, "Do not inform (the believers) of the information given to you by God, lest you provide them with support for their argument concerning your Lord. Do you not understand?"

76. மேலும், நம்பிக்கையாளர்களை அவர்கள் சந்திக்கும் பொழுது, அவர்கள் கூறுகின்றனர், நாங்கள் நம்புகின் றோம், ஆனால் அவர்கள் ஒருவர் மற்றவருடன் ஒன்று கூடும் போது, அவர்கள் கூறுகின்றனர், உங்களுடைய இரட்சகரைக் குறித்த அவர்களுடைய வாதத்திற்கு நீங்கள் ஆதரவளிக்காதிருக்கும் பொருட்டு, கடவுள் - ஆல் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களை (நம்பிக்கை யாளர்களுக்கு) தெரியப்படுத்தாதீர்கள். நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா?

اَوَلَا يَعْلَمُوْنَ اَنَّ اللّٰهَ يَعْلَمُ مَا يُسِرُّوْنَ وَمَا يُعْلِنُوْنَ

77. Do they not know that God knows everything they conceal, and everything they declare?

77. அவர்கள் மறைக்கின்ற ஒவ்வொன்றையும், மேலும் அவர்கள் வெளிப்படுத்துகின்ற ஒவ்வொன்றையும் கடவுள் அறிகின்றார் என்பது அவர்களுக்குத் தெரியாதா?

وَ مِنْهُمْ اُمِّيُّوْنَ لَا يَعْلَمُوْنَ الْكِتٰبَ اِلَّآ اَمَانِيَّ وَاِنْ هُمْ اِلَّا يَظُنُّوْنَ

78. Among them are gentiles who do not know the scripture, except through hearsay, then assume that they know it.

78. வதந்திகளின் மூலமே தவிர, வேதத்தை அறியாதவர் களான, வேதம் வழங்கப்படாதவர்களும் அவர்களில் உள்ளனர், அத்துடன் அதனைத் தாங்கள் அறிந்திருப் பதாகவும் எண்ணிக் கொள்கின்றனர்.

فَوَيْلٌ لِّلَّذِيْنَ يَكْتُبُوْنَ الْكِتٰبَ بِاَيْدِيْهِمْ ثُمَّ يَقُوْلُوْنَ هٰذَا مِنْ عِنْدِ اللّٰهِ لِيَشْتَرُوْا بِهٖ ثَمَنًا قَلِيْلًا فَوَيْلٌ لَّهُمْ مِّمَّا كَتَبَتْ اَيْدِيْهِمْ وَوَيْلٌ لَّهُمْ مِّمَّا يَكْسِبُوْنَ

79. Therefore, woe to those who distort the scripture with their own hands, then say, "This is what God has revealed," seeking a cheap material gain. Woe to them for such distortion, and woe to them for their illicit gains.

79. எனவே, அற்பப் பொருள் சார்ந்த இலாபங்களைத் தேடி, தங்களுடைய சொந்தக் கரங்களாலேயே வேதத்தைச் சிதைத்துவிட்டுப் பின்னர், இதுதான் கடவுள் வெளிப் படுத்தியது, என்று கூறுபவர்களுக்குக் கேடுதான். இவ்வாறு சிதைத்ததற்காக அவர்களுக்குக் கேடுதான், மேலும் அவர்களுடைய முறை கேடான இலாபங்களுக் காகவும் அவர்களுக்குக் கேடுதான்.

## *Eternity of Heaven And Hell

## *சுவர்க்கமும் நரகமும் நிரந்தரமானது

وَقَالُوْا لَنْ تَمَسَّنَا النَّارُ اِلَّا اَيَّامًا مَّعْدُوْدَةً
قُلْ اَتَّخَذْتُمْ عِنْدَ اللّٰهِ عَهْدًا فَلَنْ يُّخْلِفَ اللّٰهُ عَهْدَهٗۤ
اَمْ تَقُوْلُوْنَ عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ

80. Some have said, "Hell will not touch us, except for a limited number of days." Say, "Have you taken such a pledge from God - God never breaks His pledge - or, are you saying about God what you do not know?

80. சிலர் கூறியுள்ளனர், வரையறைக்குட்பட்டதொரு நாட்களின் எண்ணிக்கைக்கே தவிர, நரகம் எங்களைத் தீண்டாது. கூறுவீராக, கடவுள்-யிடமிருந்து அத்தகைய வாக்குறுதியை நீங்கள் பெற்றிருக்கின்றீர்களா - கடவுள் ஒருபோதும் தன்னுடைய வாக்குறு தியை முறிப்பதில்லை - அல்லது, நீங்கள் கடவுள்-ஐப்பற்றி நீங்கள் அறியாத வற்றைக் கூறுகின்றீர்களா?

بَلٰى مَنْ كَسَبَ سَيِّئَةً وَّاَحَاطَتْ بِهٖ خَطِيْٓئَتُهٗ فَاُولٰٓٮِٕكَ
اَصْحٰبُ النَّارِ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ

81. Indeed, those who earn sins and become surrounded by their evil work will be the dwellers of Hell; they abide in it forever.

81. உண்மையில், பாவங்களைச் சம்பாதித்து மேலும் தங்களுடைய தீய காரியத்தினால் சூழப்பட்டவர்கள் நரகவாசிகளாக இருப்பார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

وَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اُولٰٓٮِٕكَ اَصْحٰبُ الْجَنَّةِ
هُمْ فِيْهَا خٰلِدُوْنَ

82. As for those who believe, and lead a righteous life, they will be the dwellers of Paradise; they abide in it forever.

82. நம்பிக்கை கொண்டு, அத்துடன் நன்னெறியான தொரு வாழ்வு நடத்துகின்றவர்களைப் பொறுத்த வரை, அவர்கள் சுவனவாசிகளாக இருப்பார்கள்; அவர்கள் அதில் என்றென்றும் தங்கியிருப்பார்கள்.

## The Commandments

## கட்டளைகள்

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَ بَنِىْٓ اِسْرَآءِيْلَ لَا تَعْبُدُوْنَ اِلَّا اللّٰهَ
وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا وَّذِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ
وَقُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا وَّاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ
ثُمَّ تَوَلَّيْتُمْ اِلَّا قَلِيْلًا مِّنْكُمْ وَاَنْتُمْ مُّعْرِضُوْنَ

83. We made a covenant with the Children of Israel: "You shall not worship except God. You shall honor your parents and regard the relatives, the orphans, and the poor. You shall treat the people amicably. You shall observe the Contact Prayers (Salat) and give the obligatory charity (Zakat). " But you turned away, except a few of you, and you became averse.

83. இஸ்ரவேலின் சந்ததியினருடன் நாம் ஓர் உடன் படிக்கை செய்தோம்: நீங்கள் கடவுள்-ஐத் தவிர வழிபடக் கூடாது. நீங்கள் உங்களுடைய பெற்றோரைக் கண்ணியப்படுத்தவும், உறவினர்கள், அனாதைகள், மற்றும் ஏழைகளுக்கு மதிப்பளிக்கவும் வேண்டும். நீங்கள் மனிதர்களை இணக்கத்துடன் நடத்திட வேண்டும். நீங்கள் (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளைக் கடைப்பிடிக்கவும், மேலும் (ஜகாத்) கடமையான தர்மத்தை கொடுக்கவும் வேண்டும். ஆனால் உங்களில் சிலரைத் தவிர, நீங்கள் திரும்பிச் சென்று விட்டீர்கள், மேலும் நீங்கள் வெறுப்புக் கொண்டவர்களாகி விட்டீர்கள்.

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَكُمْ لَا تَسْفِكُوْنَ دِمَآءَكُمْ وَلَا تُخْرِجُوْنَ اَنْفُسَكُمْ مِّنْ دِيَارِكُمْ ثُمَّ اَقْرَرْتُمْ وَاَنْتُمْ تَشْهَدُوْنَ

84. We made a covenant with you, that you shall not shed your blood, nor shall you evict each other from your homes. You agreed and bore witness.

84. நீங்கள் உங்களுடைய இரத்தத்தைச் சிந்தக் கூடாதென்றும், அன்றி நீங்கள் ஒருவர் மற்றவரை உங்களுடைய வீடுகளில் இருந்து வெளியேற்றக் கூடாதென்றும், உங்களுடன் நாம் ஓர் உடன்படிக்கை செய்தோம். நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள் மேலும் சாட்சி பகர்ந்தீர்கள்.

**Notes**

2:80-82 It is an established belief among corrupted Muslims that they will suffer in Hell only in proportion to the number of sins they had committed, then they will get out of Hell and go to Heaven. They also believe that Muhammad will intercede on their behalf, and will take them out of Hell. Such beliefs are contray to the Quran (Appendix 8)

குறிப்பு:

2:80-82 தாங்கள் செய்த பாவங்களுடைய எண்ணிக்கையின் விகிதாசாரப்படி தண்டனையை நரகில் அனுபவித்து விட்டு, பின்னர் வெளியேற்றப்பட்டு சுவனம் நுழைவோம் என்பது இன்றைய முஹம்மதியர்களிடம் நிலைபெற்று விட்ட ஒரு நம்பிக்கை மேலும் அவர்கள். முஹம்மத் தங்களுக்காகப் பரிந்துரை செய்வார் என்றும் அதன் காரணமாக நரகிலிருந்து வெளியேற்றப்படுவோம் என்றும நம்புகிறார்கள். இத்தகைய நம்பிக்கைகள் குர் ஆனுக்கு முரணானதாகும். (பின். இணைப்பு 8)

(22ம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்தும் நம்பிக்கையாளர் கட்குக் கடமை என்று இறைவன் கூறுகிறார். ஹதீஸ்களைப், பின்பற்றுபவர்கள் இரவு நேரத்தில் வித்ருவாஜிப் என்றொரு தொழுகையைக் கடமையாகக் கருதுகிறார்கள். மேலும் சுன்னத் (இதில் இருவகை) நபில், (இதில் பற்பல வகைகள்) என்று பலவற்றை உண்டாக்கி இறைவனின் இலகுவான மார்க்கத்தைக் கடினமான ஒன்றாக ஆக்கி இருக்கிறார்கள். அதைப் போன்ற ஒன்றே இவர்கள் கூறும் தஹஜ்ஜத் தொழுகை என்பது. இது அனைவருக்கும் கடமை அல்ல வென்றும் இவர்களே கூறுவார்கள். இப்படி, இல்லாத ஒரு தொழுகையை இவர்களே உண்டாக்கிக் கொண்டு, அதற்காக இவர்கள் கருத்துச் சிதைவு செய்திருக்கும் நீங்கள் குறிப்பிட்டி ருக்கும் வசனங்களைப் பார்ப்போம்.

17:79 வசனத்தில் இரவில், உபரி நன்மைக்காக 'தஹஜ்ஜத்' செய்து வாருங்கள் என்று தான் உள்ளது 'தஹஜ்ஜத் தொழுகை' செய்யுங்கள் என்று அல்ல. தஹஜ்ஜத் என்பது இங்கே இறைவனைத் தியானிப் பதைக் குறிக்குமே அன்றி தொழுகையை அல்ல. இவ்வசனம் இரவு நேரங்களில் விழித்திருந்து இறைவனைத் தியானிக்கும் படியும், அது நமக்கு உபரி நன்மை (நஃபில்) ஆகும் என்றும் கூறுகிறது.

73:2-4,6 ஆகிய வசனங்க ளும் இரவில் விழித்தெழுந்து இறை வனைத் தியானிப்பதையே குறிக் கிறது. 73:6ம் வசனம் இரவில் தியானம் செய்வது மனக்கட்டுப் பாட்டை வளர்க்கக் கூடியதாக உள்ளது என்று குறிப்பிடுகிறது. இது இன்று ஆராய்ச்சி ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

76:26ம் வசனமும் இரவில் நாம் தியானம் செய்யும்போது அவ்வப் போது இறைவனுக்கு ஸஜ்தா (சிரவணக்கம்) செய்வதைக் குறிக்கிறதே தவிர தொழுகையை அல்ல. அவ்வசனத்தில் 'தஸ்பீஹ்' (தியானித்தல், துதித்தல்) என்ற சொல் இடம்பெறுவது இதற்கு மேலும் ஓர் ஆதாரமாகும். எனவே தஹஜ்ஜத் என்பது (Meditation) இறைத்தியானம் என்று நம்பிக்கையாளர்கள் உறுதிப்படுத்தப்படுகிறார்கள்.

**நிச்சயமாகத் தொழுகைகள் அந்த அந்த நேரங்களில் தொழப்பட வேண்டும். நேரம் கழிந்த பின்னரோ (களாவாகவோ) அல்லது சேர்த்துத் தொழுவதோ, (ஜம்வு)கூடாது.**

# குர்ஆனும் ஷைத்தானின் சூழ்ச்சி விளையாட்டும்

ஷைத்தான் ஒரு மிகப்பெரும் ஏமாற்றுக்காரன். இறைச் செய்தியை மக்கள் புரிந்து கொள்வதைத் தடுக்க அவன் ஆடும் தேர்ந்த சூழ்ச்சி விளையாட்டு அவர்களை குர் ஆனி லிருந்து தள்ளி நிறுத்துவதுதான். குர்ஆன் அரபி மொழியில் வெளிப் படுத்தப்பட்ட போதிலும் இறைவன் அதனை தானே கற்றுக் கொடுப்பதாக வும் (55:1-2) தானே அதனை விளக்கி வைப்ப தாகவும் (75:19) கூறுகிறார். மொழி ஒரு பொருட்டல்ல எனவும் (41:44)ல் இறைவன் கூறியுள்ளார். மேலும் நேர்மையுள்ள ஒவ்வொரு வரும் அவர்கள் எம்மொழியைச் சார்ந்த வராயினும் குர்ஆனைப் புரிந்து கொள்வார்கள். அதே போல், நேர்மையற்றவர்களும்,இறைவனை மட்டும் தனித்து வழிபடத் தவறியவர் களும் அதனைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுவார்கள்.

(அவர்கள் அரபி மொழியை பேச, படிக்க, எழுதக் கூடியவர்களாய் இருந்த போதிலும்) பார்க்க 56:79. குர் ஆனைப் புரிந்து கொள்வதிலி ருந்து எல்லாத் தரப்பு முஸ்லிம்களை யும் தள்ளி நிறுத்தும் வகையிலேயே ஷைத்தான் அவன் விளையாட்டை வடிவமைத்து உள்ளான்.வெறுமனே படிப்பதனால் மட்டும் குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியாது என்பதை ஷைத்தான் நன்றாக தெரிந்து வைத்துள்ளான்.

இறைவன் அனைத்தையும் தன் கட்டுக்குள் வைத்துள்ளார் என்பதை யும் அவர் அனுமதியாமல் குர்ஆனி லிருந்து எதையும் யாரும் பெற்று விட முடியாது என்பதையும் ஷைத்தான் நன்கு தெரிந்து வைத்துள்ளான். இறைவனை நம்புவதை விடுத்து தன்னை நம்பும்படிச் செய்வதுதான் அவனுடைய பெரும் மோசடி. வெற்றியடைய வழிவகுக்கக் கூடிய தாக இருக்கும். ஆகவே அவ்வாறு அவனை நம்புபவர்கள் குர்ஆனைப் புரிந்து கொள்வதிலிருந்து தடுக்கப் படு கிறார்கள். இறைவன் எவ்வித கூட்டாளிகளையும் அங்கீகரிப் பதில்லை .

இறைவனை மட்டும் வழிபடத் தவறிய, அவருடைய வேதத்தை மட்டும் அங்கீகரிக்கத் தவறியவர்கள் மீது மட்டும் வெற்றிகரமாகப் பிரயோகிக்கப்படும் ஷைத்தான் ஆடும் சூழ்ச்சி விளையாட்டைக் கீழே தருகிறோம்.

1. அரபி மொழி உங்களின் தாய்மொழியாயிருப்பின் நீங்கள் சொந்தமாக குர் ஆனைப் புரிந்து கொள்ள முடியாது. எனவும்

ஏனென்றால் அது அதி உயர்ந்து, அணுக முடியாத அரபி மொழியில் உள்ளது எனவும் ஷைத்தான் (அல்லது அவன் படையினர் ) உங்களுக்கு போதனை செய்ய ஆரம்பிப்பான். மேலும் அவர்கள், குர் ஆனை உங்களுக்கு விளக்குவ தற்கு அரபி மொழியில் மிகவும் பாண்டித்யம் பெற்ற ஒரு நபர் தேவை என்றும் அறிவுறுத்தத் தொடங்குவார்கள். எனவே அரபி மொழிபேசக்கூடிய ஒரு நபர் அப்படிப்பட்ட புலமை வாய்ந்த ஒரு நபருக்காக காத்திருக்கவும், தேடவும் முற்பட்டு அவர்கள் தங்களுடைய குர்ஆனைப் படிப்பதையே கைவிட்டு விடவும் தயாராக்கி விடுவார்கள்.

அரபி மொழி பேசக்கூடிய உங்களின் நண்பர்களிடம் குர்ஆனின் நடையைப் பற்றி வினவு வீர்களா னால் அவர்கள் அது கடினமானது என்று மிகவும் சுலபமாகக் கூறிவிடு வார்கள். அரபு நாடுகளில் வேலை செய்வோர் முயற்சி செய்து பார்க்கலாம். ஆனால் குர்ஆனைப் பற்றியும், குர்ஆனின் நடையைப் பற்றியும் நம்மிடம் இறைவன் கூறுவதென்ன?

இதற்கான இறைவனின் பதில் பெற பார்க்க 54:17, 22, 32, 40. அவர்களுக்கு ஏன் அது கடினமாக உள்ளது என அறிய படிக்க 56:79 மற்றும் 41:44.

2. உங்களுக்கு உங்களுடைய தாய்மொழியானது அரபி மொழியல் லாததாக இருக்கும் பட்சத்தில் ஷைத்தானும் (அல்லதுஅவனுடைய படையினரானஆலிம்கள்)உங்களை எவ்வாறு வழிகெடுக்கிறான் என்றால் நீங்கள் அக்குர் ஆனை அரபியில்தான் ஓதவேண்டும் என்பான். இவ்வாறு அவன் சொல்வதன் காரணம் நீங்கள் அரபி மொழியில் படித்து எதையும் விளங்கிக் கொள்ள முடியாது என்பதை ஷைத்தான் அறிந்து வைத்திருப்பதால்தான். (மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் தந்திரம்) சரி, அரபி மொழியைக் கற்றுக் கொண்டு குர் ஆனைப் படிக்க விழைவோரும் கூட அரபி மொழியின் தெளிவுகளை கற்க முடியாமல், அரபி மொழிக்கென அமைந்த சில குறிப்பிடத்தகுந்த விதங்களிலான வாக்கியங்கள் மற்றும் வார்த்தைகளின் பயன்பாட்டையும், கருத்தாக்கத்தையும் புரிந்து கொள்ளா மல் அல்லது தேவையான அளவு அதில் மேம்பட முடியாமல் போகி றார்கள். அவர்களின் எண்ணம், செயல் திறன் ஆகியவற்றில் எண்ணற்ற ஓட்டைகள் விழுந்து விடுகிறது. பாகிஸ்தான், இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் குழந்தைப் பருவத்திலும் சரி, வளர்ந்து விட்ட பருவத்திலும் சரி, குர் ஆனில் உள்ள ஒற்றை வார்த் தைக்குக்கூட அர்த்தம் தெரியாத நிலையில், அதனைப் புரிந்து கொள்ளாத நிலையில் குர்ஆனை வெறுமனே அரபியில் தான் ஓத வேண்டும் என்று நிர்ப் பந்திக்கப் படுகிறார்கள்.

**ஏனெனில் குர்ஆன் ஒரு இறைச் செய்தியாகும் பத்தோடு பதினொன்றான ஒரு கவித்துவம் வாய்ந்த அழகுமிக்க நடையிலுள்ள பண்டைய புத்தகமல்ல. அதனை அரபிமொழியில் உங்களால் படிக்க முடியவில்லையே என்றெண்ணிகாலத்தை வீணடித்துக் கொண்டி ருப்பீர்களானால், அரபியில் நிபுணத்துவம் பெற்றவர்களாக நாம் ஆகவேண்டுமே என்று எண்ணிக் கொண்டு நாட்களைக் கடத்தி கொண்டு இருப்பீர்களானால் சென்றுவிட்ட நாட்கள் திரும்ப வரபோவதில்லை இறைவனை முழுமையாக நம்பி இப்போழுதே உங்களுடைய மொழியில் படிப்பீர் களானால் அவர்தான் குர்ஆனை கற்றுக்கொடுப்பவர் என்பதை அனுபவப் பூர்வமாக தெரிந்து கொள்வீர்கள். அவர் எந்த ஒரு மொழியிலும், எந்த ஒரு நாட்டவருக்கும் போதிக்க கூடியவர் ஏனெனில் அவரே அனைத்தையும் படைத்தவர்.**

3. நீங்கள் அரபியைப் பேசாதவராகவோ, படிக்காத வராகவோ இருந்து குர்ஆனின் செய்தியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அதன் மொழிப் பெயர்ப்பைப் படிக்க முயல்வீர் களானால் குர்ஆனை அரபியில் மட்டும்தான் ஓதவேண்டும் என்பான் ஷைத்தான். (அல்லது அவனது படையினரான ஆலிம்கள் ) அதே சமயம் குர்ஆனை அரபி மொழியில் படிக்கத் தெரிந்தவர் களிடம் என்ன சொன்னான் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதல் லவா? அது: குர்ஆன் அரபி மொழி யிலேயே கடினமான நடையில் அமைக் கப்பட்டுள்ளது என்பதுதான்.

ஆக மொத்தத்தில் விளைவு என்னவென்றால் அரபி பேசும் நபர் குர்ஆனை அரபியில் படிக்க மாட்டார். ஏனெனில் அந்த நபர் ஷைத்தானை நம்பி குர்ஆன் படிப்பதற்கு ரொம்ப கடினமானது என நம்பி முடிவெடுத்து விட்டார். அதே வேளையில் அரபி பேசாத மற்றவர்களோ ஷைத்தானை நம்பி புரிந்து கொள்ளாமலேயே குர்ஆனை அரபியில் படிக்க முயல்கிறார்கள். மேலும் அவர்கள் குர்ஆனை புரிந்து அதன் செய்தியை அங்கீகரிக்காத நிலையில் அரபியில் வெறுமனே படித்தாலே நல்லது அதன் எழுத்துக்களின் மீது விரல்களை வைத்துக் கொண்டே சென்றாலே கூட நன்மைகள் கிடைக்கும் என்று கருதுகின்றனர்.

குர்ஆனை தத்தம் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு அதனை படிக்க விழைபவர்கள் ஷைத்தானை நம்பி ஷைத்தானின் போதனையான 'மொழி பெயர்ப்பை படிப்பதின் மூலம் குர்ஆனின் செய்திகளை உங்களால் பெற முடியாது' என்பதை ஏற்பார்களானால் அவர்களும் ஷைத்தானின் வலையில் விழ நேரிடும். அது மட்டுமல்லாமல் ஷைத்தானால் மேலும் அதைரியப் படுத்தப்பட்டு அதன் முடிவாக குர்ஆனை எந்த ஒரு மொழியிலும் படிப்பதையே கைவிடநேரிடும்.

மேலே சொல்லப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் குர்ஆனின் செய்திகளைப் பெறுவதிலிருந்து முஸ்லிம்களைத் தள்ளி நிறுத்து வதில் ஷைத்தான் வெற்றி பெறுகின்றான். இங்கே முஸ்லிம் களோ, முஸ்லிம் அல்லாதவர்களோ செய்யக் கூடிய தவறு என்ன வென்றால் அது அவர்கள் கடவுளை நம்புவதை விடுத்து ஷைத்தானை நம்பிவிட்டது தான் அவர்கள் அவனுடனே [ஷைத்தானுடனே] இருந்து விடவேண்டும் என்று முடி வெடுத்து விட்டார்கள். அங்கு குர்ஆனும் இல்லை , ஒளியுமில்லை , வழிகாட்டுதலும் இல்லை .

நாம் ஷைத்தானின் சூழ்ச்சி விளையாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். அது கொண்டு அதனை எதிர் கொள்ள இயலும், அதற்கு குர்ஆனை நாம் புரிந்து படிப்பது மிக மிகத் தேவையாய் இருக்கிறது அப்படியில்லாமல் மதிப்பு மிக்க புத்தகங்களைச் சுமக்கும் கழுதை களைப் போல் [62:5] புரியாத நிலையில் ஒதுவதால் எவ்வித பலனுமில்லை

ஏனெனில் குர்ஆன் ஒரு இறைச் செய்தியாகும் பத்தோடு பதினொன் றான ஒரு கவித்துவம் வாய்ந்த அழகுமிக்க நடையிலுள்ள பண்டைய புத்தகமல்ல . அதனை அரபிமொழியில் உங்களால் படிக்க முடியவில்லையே என்றெண்ணி காலத்தை வீணடித்துக் கொண்டி ருப்பீர்களானால், அரபியில் நிபுணத் துவம் பெற்றவர்களாக நாம் ஆக வேண்டுமே என்று எண்ணிக் கொண்டு நாட்களைக் கடத்தி கொண்டு இருப்பீர்களானால் சென்று விட்ட நாட்கள் திரும்ப வரபோவதில்லை இறைவனை முழுமையாக நம்பி இப்போழுதே உங்களுடைய மொழியில் படிப்பீர் களானால் அவர்தான் குர்ஆனை கற்றுக்கொடுப்பவர் என்பதை அனுபவப் பூர்வமாக தெரிந்து கொள்வீர்கள். அவர் எந்த ஒரு மொழியிலும், எந்த ஒரு நாட்டவருக்கும் போதிக்க கூடியவர் ஏனெனில் அவரே அனைத்தையும் படைத்தவர்.

இன்றைக்கே உங்களது குர்ஆனைப் படியுங்கள் [இதற்கு மேலும் தாமதிக்காதீர்கள்] அதனை புரிந்து கொள்ளலாம், அதில் தேர்ச்சி பெறலாம். மற்றதை இறைவனிடமே விட்டு விடுங்கள்.

★ ☆ ★

# பகிரங்க எச்சரிக்கை

ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் அல்லது தூதர் ஒருவரை இறைவன் அனுப்பி வைக்கும் போதெல்லாம் மக்களில் பெரும்பாலோர் அவரை நிராகரிப்பவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர், என்பதைக் குர்ஆன் நமக்கு அறிவுறுத் துகின்றது. சிலர் கொல்லப்பட்டும், சிலர் தாக்கப்பட்டும் சிலர் அவர்களுடைய வீடுகளை விட்டு விரட்டப்பட்டும் இருந்திருக் கின்றனர். கடந்தகால இறை நிராகரிப்பாளர்களின் இதே நடவடிக்கைகளைப் பின்பற்றி இன்றைய முஹம்மதியர்களும் இதே குற்றத்தைச் செய்கின்றனர். அவர்கள் குர்ஆனில் அடங்கி யிருக்கும் இறை அற்புதத்தை நிராகரிப்பதன் காரணமாக அவ்வற் புதத்தை அறியத் தந்த இறை தூதரை நிராகரிப்பவர்களாகவும் உண்மை யான இறைவேதமான குர் ஆனையே நிராகரிப்பவர்களா கவும் இருக்கின்றனர். இதற்கு முன்னர் இறைவனால் அனுப்பப் பட்ட இறை தூதர்கள், 'ஓர் இறையை மட்டுமே' வணங்கும்படி போதித்து வந்தனர். அவர்களுடைய வழியி லேயே டாக்டர் ரஷாத் கலிஃபா 'ஓர் இறையை மட்டுமே வணங்க வேண்டும்'. என்ற இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட உண்மையான இஸ்லாத்தைப் போதித்து வந்தார். அவருடைய செய்தியை எவர் கவனிக்கவில்லையோ அவருக்கு வேதனை வாக்களிக்கப்படுகிறது. இறைவனுடைய வழிமுறையில் (சுன்னத்தில்) எந்தவிதமான மாற்றங் களும் இருப்பதில்லை. ஒவ்வொரு சமூகத்தாரும் அவர்களுடைய தூதரை நிராகரித்த பொழுது இறை தண்டனையாக அவர்கள் நாசமாக்கப் பட்டார்கள் என்பதாகக் குர்ஆன் நமக்கு அறிவுறுத்துகிறது.

**நூஹ்:**

நூஹ்வுடையை ஜனங்கள் தூதர் களை நிராகரித்தனர். அவர்களுடைய சகோதரர் நூஹ் அவர்களை நோக்கி, "நீங்கள் தூயவர்களாகிவிட.. வேண்டாமா? நான் உங்களுக்கு ஒரு கண்ணியமுள்ள தூதனாவேன். நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள். நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை. என்னுடைய கூலி, பிரபஞ்சங்களின் அதிபதியிடமிருந்து வருகிறது. நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்குக் கீழ்ப்படியுங்கள். அதற்கவர்கள், "எவ்வாறு உம்மை நாங்கள் நம்புவது? மிக கீழ்த்தரமான வர்களே உம்மைப் பின்பற்றுகிற பொழுது?" என்று கூறினர். அதற்கவர், "அவர்கள் என்ன - செய்தார்கள் என்பதை நான் எவ்வாறு அறிவேன்? அவர்களிடம் கணக்குக் கேட்பது என் இறைவனிடமே இருக்கிற கட விசுவாசம் கொண்டவர்களை ஒரு போதும் நான் விலக்கிவிட

முடியாது. நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனேயன்றி வேறில்லை." என்றார். அதற்கவர்கள் 'நூஹே! நீர் விலகிக் கொள்ளாவிடில் நீர் கல்லெறிந்து கொல்லப்படுவீர்" என்று கூறினர். நாம் அவரையும் அவருடன் இருந்தவர்களையும் நிறைந்திருந்த கப்பலில் இரட்சித்துக் கொண்டோம். பின்னர் மற்றவர்களை மூழ்கடித்து விட்டோம். இதில் ஒரு படிப்பினை இருக்கிறது. ஆயினும் மக்களில் பெரும் பாலோர் விசுவாசி களாயிருப்பதில்லை. (26:105-121)

## ஹூத்

'ஆது' தூதர்களை நிராககரித் தனர். அவர்களுடைய சகோதரர் 'ஹூத்' அவர்களிடம் கூறினார்: "நீங்கள் தூயவர்களாகிவிட வேண்டாமா? நான் உங்களுக்கு ஒரு கண்ணியமுள்ள தூதனாவேன். அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள். நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை. என்னுடைய கூலி பிரபஞ்ச அதிபதியிடமிருந்து வருகிறது. (26:123-127) அதற்கவர்கள், நீர் உபதேசம் செய்வதும் செய்யாமலிருப்பதும் சமமே. எங்களுக்கு முன்னிருந்தோருக்கும் இது அனுபவமாயிருந்திருக்கிறது. எங்களுக்கு யாதொன்றும் நிகழாது." என்று கூறினர். இவ்வாறு அவர்கள் நிராகரித்ததனால் நாம் அவர்களை நாசமாக்கி விட்டோம். இதில் ஒரு படிப்பினை இருக்கிறது. ஆயினும் மக்களில் பெரும்பாலோர் விசுவாசி களாயிருப்பதில்லை (26:136-139)

## சாலிஹ்

'தமூது' தூதர்களை நிராகரித்தனர். அவர்களுடைய சகோதரர் ஸாலிஹ் அவர்களிடம் கூறினார்: "நீங்கள் தூயவர்களாகிவிட வேண்டாமா? நான் உங்களுக்கு ஒரு கண்ணிய முள்ள தூதனாவேன். அல்லாஹ்வுக் குப் பயந்து எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள். நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை. என்னு டைய கூலி, பிரபஞ்ச அதிபதி யிடமிருந்து வருகிறது. இங்கு என்றென்றைக்கும் நிலையாக விட்டு வைக்கப்படுவோம் என்று நீங்கள் எண்ணிக் கொண்டீர்களா? நீங்கள் தோட்டங்களிலும் நீரூற்றுக்களிலும் மகிழ்ந்திருக்கிறீர்கள். விவசாயப் பண்ணைகளிலும், சுவையுள்ள பழங்களைக் கொண்ட பேரீச்சை தோப்புகளிலும், மலைகளைக் குடைந்து வீடுகளை அமைத்துக் கொள்கிறீர்கள். ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து எனக்குக் கீழ்படிந்து நடங்கள். (26:141-150) அதற்கவர்கள், "நீர் சூனியத்திற் குள்ளாகி விட்டீர். நீர் நம்மைப் போன்ற ஒரு மனிதர்தான். நீர் உண்மை சொல்பவராயிருந்தால் ஓர் அற்புதத்தை நமக்குக் கொண்டு வாரும்" என்று கூறினர். (26:150-154) அவர்களை வேதனை பிடித்துக் கொண்டது. இதில் ஒரு படிப்பினை இருக்கிறது. ஆயினும் மக்களில் பெரும்பாலோர் விசுவாசிகளா யிருப்பதில்லை. (26:158)

அரபியல்லாத மக்களுக்கு நாம் இதனை வெளிப்படுத்தியிருந்தால் அவர் அதனை (அரபியில்) ஓதிக் காண்பித்தால் அவர்கள் இதில் நம்பிக்கை கொள்ளவே மாட்டார்கள். குற்றவாளிகளின் இருதயங்களில் இவ்வாறு நாம் இதனை உண்டாக்கியிருக்கிறோம். (வேற்று மொழியில்) அவர்கள் இதன் மீது நம்பிக்கை கொள்ளவே மாட்டார்கள். துன்புறுத்தும் வேதனையை இவர்கள் காணும் வரையில் இதனை நம்பிக்கை கொள்ளவே மாட்டார்கள். அது அவர்கள் உணர்ந்து கொள்ளாதவாறு திடீரென அவர்களை வந்தடையும். அச்சமயம் அவர்கள், "எங்களுக்கு அவகாசம் கொடுக்கப் படுமா?" என்று கேட்பார்கள். நீர் பார்க்கவில்லையா? பல வருடங்கள் நாம் அவர்களை சுகமனுபவிக்க அனுமதித்திருந்தோம். பின்னர் வாக்களிக்கப்பட்ட வேதனை அவர்களை வந்தடைந்தது. அவர்களுடைய சுகபோகங்களில் ஒன்றுமே அவர்களுக்கு உதவி செய்யவில்லை. எச்சரிக்கை செய்பவர்களை அனுப்பாத வரையில் எந்த ஒரு சமூகத்தினரையும் நாம் அழித்து விடவில்லை . இது ஒரு நினைவூட்டல் ஆகும். நாம் ஒருபோதும் அநியாயம் செய்பவராக இருக்கவில்லை. (26:198-209)

## லூத்

'லூத்' உடைய மக்கள் தூதர்களை நிராகரித்தனர். அவர்களுடைய சகோதரர் லூத் அவர்களிடம் கூறினார்: "நீங்கள் தூயவர்களா கிவிட வேண்டாமா? நான் உங்களுக்கு ஒரு கண்ணியமுள்ள தூதனாவேன். நீங்கள் அல்லாஹ் வுக்குப் பயந்து எனக்குக் கீழ்ப்படிந்து நடங்கள். நான் உங்களிடம் யாதொரு கூலியையும் கேட்கவில்லை என்னு டைய கூலி பிரபஞ்ச அதிபதி யிடமிருந்து வருகிறது. மக்களில் நீங்கள் ஆண்களிடமா இச்சையைத் தணித்துக் கொள்கிறீர்கள்? உங்கள் இறைவன் உங்களுக்காகப் படைத் துள்ள மனைவிகளை விட்டுவிட்டு? நீங்கள் வரம்பு மீறியவர் களாவீர்கள்" அதற்கவர்கள், "லூத்தே! நீர் விலகிக் கொள்ளாவிடில் நீர் துரத்தப்பட்டு விடு வீர்', என்று கூறினர். அவர் கூறினார். "உங்களுடைய செய்கை களுக்காக நான்வருத்தப்படுகிறேன்.

என் இறைவனே! அவர்களுடைய செயல்களிலிருந்து என்னையும் என் குடும்பத்தாரையும் காப்பாற்று வீராக!" (26:160-169) அவர்கள் மீது நாம் மழையைப் பொழியச் செய்தோம். அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்டவர்கள் மீது இழிவான மழையைப் பொழியச் செய்தோம். **இதில் ஒரு படிப்பினை இருக்கிறது. ஆயினும் மக்களில் பெரும் பாலோர் விசுவாசிகளாயிருப்பதில்லை. (26:173-174)**

### ஷுஐப்:

சோலை வாசிகள் தூதர்களை நிராகரித்தனர்.ஷுஐப் அவர்களிடம் கூறினார்: "நீங்கள் தூயவர்களா கிவிட வேண்டாமா? நான் உங்களுக்கு ஒரு கண்ணியமுள்ள தூதனாவேன். அல்லாஹ்வுக்குப் க பயந்து எனக்குக் கீழ்ப்படியுங்கள். நான் உங்களிடம் யாதொரு கூலியும் ( கேட்கவில்லை. என்னுடைய கூலி பிரபஞ்ச அதிபதியிடமிருந்து வருகிறது. உங்கள் வர்த்தகத்தில் அளவைப் பூரணமாக அளங்கள். மோசடி செய்யாதீர்கள். சரியான தராசு கொண்டு எடை போடுங்கள். மனிதர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுக் காமல் மோசடி செய்யாதீர்கள். பாவம் செய்வதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். அவர்கள் கூறினர், "நீர் சூனியத்திற்குள்ளாகி விட்டீர். நீர் நம்மைப் போன்ற மனிதரேயன்றி வேறில்லை. மேலும் நாங்கள் உம்மைப் பொய்யர், என்றே எண்ணுகிறோம். நீர் உண்மையாளராயிருந்தால் வானத்திலிருந்து ஒரு துண்டை எங்கள் மீது விழும்படி செய்யும்." (26:176-187) அவர்கள் அவரை நிராகரித்தனர். ஆகவே சூழ்ந்து கொள்ளும் கொடுமையான நாளின் வேதனை அவர்களைப் பிடித்துக் கொண்டது. அது ஒரு கொடுமையான வேதனை நாளாகும். **இதில் ஒரு படிப்பினை இருக்கிறது. ஆயினும் மக்களில் பெரும்பாலோர் விசுவாசிகளா யிருப்பதில்லை. (26:189-190)**

### ரஷாத் :

மேலும் இது பிரபஞ்ச அதிபதியிடமிருந்து அருளப்பட்டதாக இருக்கிறது. நேர்மையான ஆவி இத்துடன் இறங்கினார். நீர் எச்சரிக்கை செய்பவர்களில் ஒருவராக இருக் கலாம் என்பதால் தெளிவான அரபி மொழியில் உமது இருதயத்தில் வெளிப்படுத்தி வைத்தார். இது முன்னுள்ள வேதங்களிலும் முன்னறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இஸ்ராயிலின் சந்ததியிலுள்ள கல்வி மான்கள் இதனை அறிந்திருப்பது அவர்களுக்குப் போதுமான அறிகுறி யாக இருக்கவில்லையா? (26:192 -197) இறைவனால் வாக்குறுதி யளிக்கப்பட்ட தூதராக வந்த டாக்டர் ரஷாத் கலிஃபா, இறைவனுடைய ஒரே மார்க்கமான இஸ்லாத்தைத் (Submission - இறைவனுக்கே முற்றிலும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுதல்) தூய்மைப்படுத்தவும் ஒன்றிணைக் கவும் செய்தார். அவர், இணை வைத்து வணங்குபவர்

களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய அளவு எச்சரிக்கை செய்தார். ஆனால் சிகாகோவின் இஸ்லாமிக் யுனிவர்சி டியைச் சேர்ந்த டாக்டர் ஆசாத்பசூல், அற்புதத்தை நிராகரித் ததுடன் மறை முகமாக அவ்வற் புதத்திற்கு எதிராக திடுக் கிடும் திட்டங்களைத் தீட்டி இறை நிந்தனைக்கும் துணிந்தார். இந்த மக்கள் குர்ஆன் அருளப்பட்ட அரபியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த போதிலும் உண்மையை அவர்களால் அறிந்து கொள்ள இயலவில்லையே? ஏன்? பின்வரும் வசனங்கள் இதற்கான விடையை நமக்குத் தருகிறது. அல்லாஹு அக்பர்!

இது ஒரு கண்ணியமிக்க குர்ஆன் ஆகும். ஒரு பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் இருக்கிறது. உண்மை யாளர்களைத் தவிர இதனை அறிந்து கொள்ள இயலாது. (56:77-79). அரபியல்லாத மக்களுக்கு நாம் இதனை வெளிப்படுத்தி இருந்தால் அவர் அதனை (அரபியில்) ஓதிக் காண்பித்தால் அவர்கள் இதில் நம்பிக்கை கொள்ளவே மாட்டார்கள். குற்றவாளிகளின் இருதயங்களில் இவ்வாறு நாம் இதனை உண்டாக்கியிருக்கிறோம் . (வேற்று மொழியில்) அவர்கள் இதன் மீது நம்பிக்கை - கொள்ளவே மாட்டார்கள். துன்புறுத்தும் வேத னையை இவர்கள் காணும் வரையில் இதனை நம்பிக்கை கொள்ளவே மாட்டார்கள். அது அவர்கள் உணர்ந்து கொள்ளாதவாறு

திடீரென அவர்களை வந்தடையும். அச்சமயம் அவர்கள், "எங்களுக்கு அவகாசம் கொடுக்கப் படுமா?" என்று கேட்பார்கள். நீர் பார்க்கவில்லையா? பல வருடங்கள் நாம் அவர்களை சுகமனுபவிக்க அனுமதித்திருந்தோம். பின்னர் வாக்களிக்கப்பட்ட வேதனை அவர்களை வந்தடைந்தது. அவர் களுடைய சுகபோகங்களில் ஒன்றுமே அவர்களுக்கு உதவி செய்யவில்லை. எச்சரிக்கை செய்பவர்களை அனுப்பாத வரையில் எந்த ஒரு சமூகத் தினரையும் நாம் அழித்து விடவில்லை. இது ஒரு நினைவூட்டல் ஆகும். நாம் ஒருபோதும் அநியாயம் செய்பவராக இருக்கவில்லை. (26:198-209)

பொடிப் பொடியாக நொறுங்கிக் காணாமல் போய்விட்ட கம்யூனிசக் கொள்கையைப் போல, இன்றைய பிழையுற்ற இஸ்லாம் பொடிப் பொடியாக நொறுங்கி உண்மையான இஸ்லாம் நிறுவப்பட வேண்டும் என்பது இறைவனது நாட்டமாக இருக்கிறது. இறைவனுடையப பட்ட தூதர் டாக்டர் ரஷாத் கலிஃபா அவருக்கு அளிக்கப்பட்ட இறை செய்தியைத் தேவையான இறைநேசர்கள் பெற்றுக் கொள்ளவே நம்மிடையே விட்டுச் சென்றார். எனவே இறை செய்தியைப் புறக்கணிக்காதீர்கள். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் "அறிவாளிகள் மட்டுமே கவனம் செலுத்துவார்கள்", (2:269). இது ஒரு பகிரங்க எச்சரிக்கையேயன்றி வேறில்லை .

எல்லா புகழும் இறைவனுக்கே.

# குர்ஆன் கூறும் ஜீவனாம்சம்

## அல்முபீன் கேள்விகளுக்குப் பதில்கள்

தலாக் சொல்லப்பட்ட பெண்களுக்கு நல்ல முறையில் வாழ்வதாரம் கொடுக்கப்படவேண்டும் (2:241)

கேள்வி: வாழ்வாதாரம் என்றால் எவ்வளவு?

பதில்: இன்று முஸ்லிம்கள் என்று தங்களைக் கூறிக் கொள்வோர் குர் ஆனைப் பின்பற்றவில்லை என்பதையும், அவர்களுடைய ஷரீஅத் சட்டம் குர்ஆன் அடிப்படையில் ஆனதல்ல என்பதையும் இக் கேள்விநிரூபிக்கிறது.

> தலாக் சொல்லப்பட்ட பெண்களுக்கு நல்ல முறையில் வாழ்வதாரம் கொடுக்கப்படவேண்டும் (2:241)

தெளிவான குர்ஆனின் மேற் கண்ட வசனம் விவாகரத்துச் செய்யப் பட்ட பெண்களுக்கு 'நியாயமான' முறையில் வாழ்வாதாரம் / ஜீவனாம்சம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து பயபக்தி உடைய நல்லோர் மீது இது கடமையாகும் என்றும் கூறுகிறது.

ஆயினும் இன்றைய பெயர் தாங்கி முஸ்லிம்கள் ஹதீஸ்களின் அடிப்படையில் இவ்வசனமும் 'மாற்றப்பட்டு விட்டது' என்று கூறி இவ்வசனத்தைச் செல்லாததாக ஆக்கி (Invalidate) தலாக் செய்யப்பட்ட பெண்களுக்கு எந்தவித ஜீவனாம் சமும் தரவேண்டியதில்லை என்பதையே ஷரீஅத் சட்டமாக வைத்திருக்கிறார்கள்.

80 களில் ராஜீவ் காந்தியின் ஆட்சியின் போது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திர சூட், ஷாபானு என்ற முஸ்லிம் பெண் தொடர்ந்த ஒரு வழக்கில் அவருக்கு ஜீவனாம்சம் தரப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார். அவர் இத்தீர்ப்பைக் குர்ஆனின் அடிப்படை

> ஆயினும் இன்றைய பெயர் தாங்கி முஸ்லிம்கள் ஹதீஸ்களின் அடிப்படையில் இவ்வசனமும் மாற்றப்பட்டுவிட்டது என்று கூறி இவ்வசனத்தைச் செல்லாததாக ஆக்கி (Invalidate) தலாக் செய்யப்பட்ட பெண்களுக்கு எந்தவித ஜீவனாம்சமும் தரவேண்டியதில்லை என்பதையே ஷரீஅத் சட்டமாக வைத்திருக்கிறார்கள்.

யில் அளித்ததாகவே கூறினார். இருப்பினும் ஹதீஸ்களின் அடிப்படையிலும் மத்ஹபுகளின் அடிப்படையிலும் அமைக்கப்பட்ட இவர்களின் ஷரீஅத் சட்டத்திற்கு முரணாகவும், முஸ்லிம் சட்டம் என்ற பெயரில் இவர்கள் இழைக்கும் அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் ஒரு தடை விதிப்பதாகவும் அமைந்த மிகவும் நியாயமான இத்தீர்ப்பை இந்தியாவில் உள்ள பெயர்தாங்கி முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கடுமையாக எதிர்த்தனர். (பெண்களுக்கு எதிரானதில் ஒன்று சேர்ந்த இவர்கள் பெண்களுக்கு ஆதரவாக, வரதட்சனை வாங்கு வதை விடுத்து மஹர் கொடுப்பதில் ஒன்று சேர்வதில்லை எல்லாப் பிரிவு களின் தலைவர்களும் ஒன்று சேர்ந்து, தங்களைக் கண்மூடிப் பின்பற்றும் பாமர முஸ்லிம்களைத் தூண்டிவிட்டு, தவறான தகவல்கள் தந்து அவர்களைப் பயமுறுத்தி, வீதிக்கு அழைத்து வந்து பலவிதமான போராட்டங்கள் நடத்தினர். முஸ்லிம் களை சிறுபான்மையினரின் காவலன் நான்தான் என்று ஏமாற்றிக் கொண்டிருந்த ராஜீவ் காந்தியிடம் 'எங்கள் ஆதரவை விலக்கிக் கொள்வோம்' என்று மிரட்டினர். ஓட்டுப் பொறுக்கும் அரசியல் வாதிகளில் ஒருவரான ராஜீவ் காந்தியும் இவர்களின் ஓட்டுக்களை மட்டும் கணக்கிலும், கருத்திலும் கொண்டு நியாயமான இத்தீர்ப்பை அளிக்கக் காரணமான இந்திய அரசியல் சட்டத்தின் அவ்விதியை

**எத்தனையோ முஸ்லிம் பெண்கள் இளவயதில் திருமணம் செய்து கொண்டு, தங்கள் உடல், மனம் அனைத்தையும் கணவனுக்கு அர்ப் பணித்து வாழ்ந்துபின்னர் அநியாயமான காரணங்களால் விவாகரத்துச் செய்யப்பட்டு, தங்கள் இளமை, அழகு ஆகியவற்றையும் இழந்து மறுமணம் செய்யும் வாய்ப்பும் இல்லாமல் நிராதரவாக இருப்பது இன்று நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்கும் யதார்த்த நிலை - உண்மை.**

மாற்றினார். முஸ்லிம்கள் தங்களால் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கு எந்தவித ஜீவனாம்சமும் தரவேண்டியதில்லை என்று சட்டத்தை பாராளுமன்றத்தில் தனக்கிருந்தமிருக் பலத்தால் (3ல் 2க்கும் மேல்) மாற்றி அமைத்தார்.. நியாயமான ஒரு சட்டத்தை, தீர்ப்பை அநியாயமான ஒரு சட்டத்தைக் கொண்டு மாற்றி அமைத்து விட்டு அதைச் 'சட்ட திருத்தம்' என்றும் கூறினார். இந்தப் பெயர் தாங்கி முஸ்லிம்களும் ராஜீவை 'ஆஹா, ஓஹோ' என்றும் முஸ்லிம்களின் நண்பர், காவலன் என்றும் புகழ்ந்துரைத்தனர்.

விதவைகளும், விவாகரத்துச் செய்யப்பட்டவர்களும் மறுமணம் செய்து கொள்வதைக் குர்ஆன் ஊக்குவிக்கிறது. இருப்பினும் எல்லா விதவைகட்கும், விவாகரத்துச் செய்யப்பட்டவர் கட்கும் மறுவாழ்வு கிடைத்து விடுவதில்லை. கிடைத்து விடாது என்பதை முக்காலும் அறிந்த இறைவன் அறிந்திருப்பதால்தான் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்கள் அவர்கள் வேறு மணம் செய்து கொள்ளும் வரை அல்லது தாங்களாகவே அவ்வீடுகளை விட்டு வெளியேறிச் செல்லும் வரை பகிரங்கமான மானக்கேடான

செயல்கள் செய்தாலொழிய வசித்த வீடுகளில் வசிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். (65:1,6,7)

மேலும் 2:241: (அல்முபீன் கேள்வியில் இடம்பெறும் வசனம்) தலாக் - விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கு நீதமான முறையில் ஜீவனாம்சம் / வாழ்வாதாரம் வழங்க வேண்டுமென்றும் கூறுகிறது.

எத்தனையோ முஸ்லிம் பெண்கள் இளவயதில் திருமணம் செய்து கொண்டு, தங்கள் உடல், மனம் அனைத்தையும் கணவனுக்கு அர்ப் பணித்து வாழ்ந்து பின்னர் அநியாய மான காரணங்களால் விவாகரத்துச் செய்யப்பட்டு, தங்கள் இளமை, அழகு ஆகியவற்றையும் இழந்து மறுமணம் செய்யும் வாய்ப்பும் இல்லாமல் நிராதரவாக இருப்பது இன்று நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்கும் யதார்த்த நிலை உண்மை .

எனவேதான் நீதமிக்க இறைவன் நீதமான முறையில் தலாக் செய்யப்பட்ட பெண்களுக்கு வாழ் வாதாரம் கொடுப்பது பயபக்தியுள்ள நீதமிக்க நல்லோர் மீது கடமையாகும் என்று கூறுகிறார். பயபக்தி உடைய நல்லோர் மீது கடமை என்று இறைவன் கூறுவதிலிருந்து பெண் களின் இவ்வுரிமையை மறுப்போர் பயபக்தி அற்றவர்கள் மட்டுமே என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. பயபக்தியுடை யவர்கள் மீது தானே கடமை. நாங்கள் பயபக்தி உடையவர்கள் அல்ல என்பதுதான் பெண்களின் இவ்வுரி மையை மறுத்துப் பேசும் நிராகரிப் போரின் பிரகடனம் மேலும் வாழ்வாதாரம் என்றால் எவ்வளவு என்ற கேள்வியையும் எழுப்பி உள்ளனர். அவ்வசனமே நியாயமான நீதமான சம்ரட்சனை - ஜீவனாம்சம் என்று கூறுகிறது. மேலும் 65:7ம் வசனம் வசதி உள்ளவர் தம் வசதிக்குத் தக்கபடியும் ஏழைகள் தங்களிடம் உள்ளதில் ஒரு நியாயமான அளவும் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது. இதனடிப்படையில் தீர்ப்பளிக்கும் நீதிபதி அது எவ்வளவு என்பதை நிர்ணயம் செய் வேண்டும் என்பதையும் நம்பிக்கை யாளர்கள் விளங்கிக் கொள்கின்றனர்.

இப்போது அவர்களின் கேள்விக் குரிய பதிலை நாங்கள் தந்துவிட்ட நிலையில் ஒரு விஷயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். வாசகர்கள் | இக்கேள்விக்கான விளக்கத்தை அவர்களிடமும் கேட்க வேண்டும். இறைவன் தெளிவான வார்த்தைகளில் தலாக் சொல்லப் பட்ட பெண்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கும் போது, எதனடிப்படையில் 'ஷரீஅத் சட்டத்தில் தலாக் செய்யப்பட்ட பெண்களுக்கு ஜீவனாம்சம்

கொடுக்கக் கூடாது என்று கூறுகிறார் கள் என்ற கேள்வியை கேட்க வேண்டும். இறைவனின் வார்த்தை களை மாற்றும் அல்லது செல்லா மலாக்கும் உரிமையை இவர்களுக் குத் தந்தது ஷைத்தானேயன்றி வேறு யாராக இருக்க முடியும் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

மேலும் இதேபோல் உயில் எழுதுவதும் பயபக்தி உடைய நல்லோர் மீது கடமை என்று 2:180ல் இறைவன் கூறுகிறார். பயபக்தி இல்லாத நிராகரிக்கும் பாவிகள் ஹதீஸ்களின் அடிப்படையில் இவ்வசனத்தையும் மாற்றப்பட்டு விட்டதாகவும், பாகப்பிரிவினை மட்டுமே செய்யப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

# இறைவனின் உதவிக் கரங்கள்

அப்துல் காதர் ஒரு தக்வாதாரி (பக்திமான்). அவர் இறைவன் மீது தான் வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையில் பெருமை கொண்டவர். அனைத்து பொறுப்புக்களையும் இறைவன்மீது சாட்டுபவராக இருப்பதில் மகிழ்ச்சி அடைபவர்.

ஒருநாள் அவர் வாழ்ந்த ஊரைக் கடும்புயல் தாக்கியது. அருகில் உள்ள நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் கருதி அங்குள்ள அனைவரையும் வேறு இடங்களுக்கு செல்லும்படி காவல் துறையினர் அறிவுறுத்தினர்.

அப்துல் காதரையும் வேறு இடத்திற்குச் செல்லும்படி காவலர்கள் கூறியபொழுது அவர் கூறினார் "இறைவன் என்னைக் காப்பாற்றுவார்".

புயல் மேலும் வலுவடைந்தது. நிலைமையோ மிகவும் மோசமடைந்தது. நதியின் நீர்மட்டம் உயர ஆரம்பித்தது. அணை உடைந்துவிடக்கூடும் என்று அஞ்சி அப்துல் காதர் வீட்டுக் கூரையின் மீது ஏறிக் கொண்டார்.

அணை உடைந்தது. ஊருக்குள் நீர் புகுந்தது. மக்களைக் காப்பதற்காக அனுப்பப்பட்ட படகு ஒன்று அப்துல் காதரையும் அடைந்தது. நீரின் இரைச்சலுக்கு மத்தியில் 'படகில் ஏறிக் கொள்ளுங்கள்' என்று அவரிடம் காவலர்கள் கூறினர், அப்துல் காதர் கூறினார்: "இறைவன் என்னைக் காப்பாற்றுவார். எனக்குப் படகுகள் தேவையில்லை." நீர்மட்டம் மேலும் உயர ஆரம்பித்தவுடன் அதிகாரிகள் மெய்யாகவே கவலை கொள்ள ஆரம்பித்தனர். அவரைக் காப்பாற்ற ஒரு ஹெலிகாப்டரை அனுப்பி வைத்தனர். அதிலும் அவர் ஏற மறுத்துவிட்டார். இறுதியில் நீர் அவரை மூழ்கடித்தது.

வானத்தின் வாயிலை அவர் அடைந்த போது, தான் மரணித்து விட்டதை அறிந்து அவர் அதிர்ச்சி அடைந்தார். அங்குள்ள வானவரிடம் கேட்டார்: 'இறைவனின் உதவியை மட்டும் எதிர்பார்த்த எனக்கு ஏன் இறைவன் உதவிக்கரம் நீட்டவில்லை? ஏன் என்னை கைவிட்டுவிட்டார். வானவர் கூறினார்: "என்ன கூறுகிறீர்கள்? உங்களைக் காக்க இறைவன் காவலர்களை அனுப்பினார், ஒரு படகை அனுப்பினார். ஒரு ஹெலிகாப்டரையும் அனுப்பினார், இதற்கு மேல் உங்களுக்கு என்ன வேண்டும்?

# நேருக்கு நேர்

## சென்ற இதழின் தொடர்ச்சி

**பள்ளிக்கூடத்தில் ஒன்றாக படித்த பால்ய நண்பர்கள் மன்சூரும், அப்துல் ரஹீமும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தங்களது 35வது வயதில் மூன்றாவது முறையாக இன்று சந்தித்து உரையாடுகின்றனர். அல்லாஹ்வுக்கு பொருத்தமாகவும் சக மனிதர்களுக்கு உதவியாகவும் வாழ வேண்டும் என்பதை சிறு வயது முதல் லட்சியமாக கொண்டவர்கள்.**

**மன்சூர்**:ஸலாமுன் அலைக்கும். வாங்க ஆலிம் ஷா நண்பரே.

**அப்துல் ரஹீம்**: வ அலைக் கும் வஸ்ஸலாம் இறைவனுக்கு அஞ்சி நடக்கக் கூடிய நீங்களும், ஏன் ஒவ்வொருவரும் குர்ஆன் கூற்றுப்படி ஆலிம்தானே நண்பரே.

**மன்சூர்**: என்ன இருந்தாலும் நீங்கள் ஓதிப்படித்து ஆலிம் பட்டம் வாங்கியவர் அல்லவா!

**அ.ரஹீம்**: நல்லது. உம்மை இரண்டு முறை சந்தித்துப் பேசியதில் எது சத்தியம், எது இணை வைப்பு? என்பது நன்கு புரிந்து விட்டது. ஆனால் பலப்பல கேள்விகள் என்னுள் இருக்கின்றன.

முதலாவதாக டாக்டர் ரஷாத் கலிஃபா என்ற நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதரை மெய்ப்பிக்கும் தூதர் என்றும், அவர் 19 என்ற கணிதக் கட்டமைப்பை கண்டுபிடித் தார் என்றும், அது இறைவனின் அத்தாட்சி என்றும் புதுக்கதை கட்டு கிறீர்கள்? முகம்மது நபிக்குப் பிறகும் தூதர்கள் வருவார்களா என்ன? இப்படிப் பல வகையான கேலிப் பேச்சும் பரிகாசமும் பலரால் செய்யப்படுகின்றன. இது பற்றி உங்கள் விளக்கம் என்ன?

**மன்சூர்**: என்னால் முடிந்த மட்டும் விளக்குகிறேன். இறைவனால் மட்டுமே செவியேற்கச் செய்யவும். நேர் வழிகாட்டவும் முடியும். உங்களது கேள்வியாவது.

**(1) ஒரு சாதாரண மனிதர் தூதராவாரா?**

உங்களிலிருந்தே நாம் தூதர்களை தேர்ந்தெடுக்கிறோம். தூதர்கள் மனிதர்களேயன்றி வேறில்லை. அவர்கள் உணவுண்ணக் கூடியவர்களாகவும், கடைத்தெருவில் நடமாடக் கூடியவர்களாகவும், இருக்கிறார்கள். இவர்தான் தூதர் என்று எவரையும் இறைவன் கூறுவதில்லை . நான் இறைவனின் தூதராக இருக்கிறேன் என்று பிரகடனப்படுத்தக் கூடியவர்

களாகத்தான் ஒவ்வொரு தூதரும் இருக்கிறார்கள். மேலும், முகம்மது நபியே தன் நாவால் ஒரு தூதரின் வருகைப் பற்றிக் கூறும்படி இறைவனால் ஏவப்படும் இறை வசனம் 72:24-28 ல் இருக்கிறது. வேதமும் ஞானமும் கொடுக்கப்பட்ட பின்னர் அதை (குர்ஆனை) மெய்ப்பிக்கும் தூதர் வருவார் என்று வசனம் 3:81லும் ஒவ்வொரு பொருளையும் நாம் எண்ணிக்கையால் மட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம் என வசனம் 72:28லும் கூறப்படுவதை நாம் அறிந்திருக்கிறோம். 19 என்ற எண்ணிக்கையானது 74:29;30 ம் வசனத்தில் இறைவனால் குறிப்பிடப் படும் அத்தாட்சியாகும். தூதர்கள் அனைவரும் பரிகாசம் செய்யப்பட்டும், பொய்யர்கள் என்று பழி சுமத்தப்பட்டும் வந்திருக்கிறார்கள். மேற்சொன்ன அனைத்து விஷயங்களும் குர்ஆனில் கூறப்படும் விஷயங்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே. மெய்ப் பிக்கும் தூதர் பற்றி எங்களது முந்தைய மாத இதழ்களைப் படித்து இன்னும் விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

**ரஹீம்**: இது அறிவியல் யுகம், இவரை விட அறிவிலும், சாமர்த் தியத்திலும் சிறந்த ஒருவர் வந்து தான்தான் தூதர் என்றும், 17 அல்லது 18 என்ற எண் கொண்டு கணிதக் கட்டமைப்பு காட்ட முடியும் என்றால், அவர்தான் தூதர் என்று ஏற்பீர்களோ? இப்படியும் சிலர் கேட்கிறார்கள்.

**மன்சூர்**: குர்ஆனை விளங்கிக் கொள்ளாமையினால் தான் இப்படிக் கேட்கிறார்கள். 19 பற்றியும், தூதர் பற்றியும் குர் ஆன் கூறினால் ஏற்றுக் கொள்வார்கள் தானே? தூதுத்துவம், தூதர் என்பது ஏதோ ஒலிம்பிக் போட்டியில் பரிசு வாங்குவது போல் நடப்பது அல்ல.

குர்ஆனைக் கொண்டு ஒவ்வொன் றையும் நிரூபிக்க, மெய்ப்பிக்க வேண்டும். குர்ஆன் கூறும் தூதருக்கான அளவுகோலுடன் அவர் இருக்க வேண்டும். முன்னர் நடந்தவற்றையும், பின்னர் நடப்பவற்

**முதலாவதாக டாக்டர் ரஷாத் கலிஃபா என்ற நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதரை மெய்ப்பிக்கும் தூதர் என்றும், அவர் 19 என்ற கணிதக் கட்டமைப்பை கண்டு பிடித்தார் என்றும், அது இறைவனின் அத்தாட்சி என்றும் புதுக்கதை கட்டுகிறீர்கள்? முகம்மது நபிக்குப் பிறகும் தூதர்கள் வருவார்களா என்ன?**

றையும், குறிப்பான செய்திகளையும் (74:27) அறிவிக்கக்கூடியவராக இருக்க . வேண்டும். குர்ஆன் வசனங்களுக்கான பொய்யான விளக்கங்களை பிரித்து அறிவித்து, ஆதாரத்துடன் நிரூபித்து, மாசுகளை நீக்கி தூய்மைப்படுத்த வேண்டும். அல்லாஹ்வின் அருள் கொண்டே தவிர எவரும் இவைகளைச் செய்து விடவும், தூதர் என்று கூறிவிடவும் முடியாது. 19 என்ற எண் 74:30ல் இறைவனால் குறிப்பிடப்படும் எண்ணாகும். வேறு எந்தஎண் கொண்டும் குர்ஆனின் கட்டமைப்பை காட்டிவிட முடியாது.

ஒரு வேளை உண்மையில் இவர் தூதராக இருந்தால்! என்ற இறையச்சத்துடன், இவர் என்னவெல்லாம் கூறுகிறார். உண்மையிருக்கிறதா பொய் கூறுகிறாரா என்று பார்க்கத் துணிந்தால் இறைவன் கொடுத்த அறிவையும், சிந்தனையையும் பயன்படுத்தி ஆராய்ந்து பார்ப்போமானால் எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிடும் அல்லவா?

தூதராக இருக்கும் பட்சத்தில், இறைத்தூதரை நிராகரித்தால் அவர்களுக்கு இழிவும், நாசமும் தான் என்ற வசனம் இருக்கிறது. அஞ்சிக் கொள்ளுங்கள்.

**அ.ரஹீம்:** தூதரை நிராகரிக்கும் மக்களுக்கு அழிவுதான் என்று குர் ஆனில் உள்ளது உண்மைதான். குர்ஆன் கூறினால் தூதரை ஏற்கத்தான் வேண்டும். ஆனால் எனக்கு உறுதிப்பாடு ஏற்படாமல் நான் எவ்வாறு ஏற்றுக் கொள்ள இயலும்.

★☆★

**குழப்பத்தை ஏற்படுத்தி, ரத்தம் சிந்த வைக்கக் கூடியவன் என்றும் பூமிக்கு கலீஃபாவாக அனுப்பப்படுபவன் என்றும் இறைவன் கூறுவது சைத்தானைத்தான். ஆதமை அல்ல.**

**இஸ்மாயிலை அறுத்து பலியிட இபுறாஹிம் நபியின் கனவில் கூறியது சைத்தான் தான். இறைவன் அல்ல.**

★☆★

**மன்சூர்**: குர்ஆன் கூறினால் ஏற்கத்தான் வேண்டும் என்ற இறைவனுக்கு அஞ்சும் உம்முடைய பேச்சு மகிழ்ச்சியைத் தருகிறது. மாஷா அல்லாஹ். நண்பரே, நல்ல உறுதிப்பாடு கொண்ட பின்னரே எது ஒன்றையும் பின்பற்ற வேண்டும். தூதர் என்பதை சற்று தள்ளி வைத்து விட்டு, அவர் என்னவெல்லாம் கூறுகிறார் என்றும், நாம் நேர்வழியில் தான் இருக்கிறோமாஅல்லது வழிகேட்டில் இருக்கிறோமா என்றும் ஒவ் வொன்றாக ஆய்வு செய்து பாருங்களேன்.

**அ.ரஹீம்**: சரி நண்பரே, அவர் என்ன கூறுகிறார் என்று சுருக்கமாக சிலவற்றைக் கூறும் பின்னர் உங்கள் இதழ்களில் விரிவாகப் பார்த்துக் கொள்கிறேன்.

5:44வசனத்தில் இந்தக் குர் ஆனைக் கொண்டு எவர்கள் தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் காஃபிர்கள் என்றும், அல்லாஹ் மார்க்கமாக்கி வைக்காததை, மார்க்கமாக்கி வைக்கக் கூடிய இணையாளர்கள் அவர்களுக்கு இருக்கின்றார்களா?(42:21) என்றும் இறைவன் கூறுவதை நினைவில் இறுத்தி ஆய்வு செய்யுங்கள். குர் ஆனைக் கொண்டு அனைத்தையும் சரிபாருங்கள்.

1) "லா இலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவையே குர்ஆன் நமக்கும், ஏன் ஆதம் முதல் முகம்மது வரை அடிப்படை மார்க்கமாக இறைவன் போதிக்கச் சொன்னதாக கூறுகிறது. முகம்மது நபியை இணைத்துச் சொல்வது ஷிர்க்.

2) ஸலவாத்து ஓதி இறைவனைப் போல நபியை துதி செய்வது அப்பட்டமான ஷிர்க்.

3) 5நேர பர்ளான தொழுகை தவிர வேறு தொழுகைகள் இறைவனால் ஏவப்படவில்லை. இறைவனை அதிகம் வணங்கி அருளைப் பெற வேறு ஏராளமான விஷயங்கள் குர் ஆனில் உள்ளன.

4)நபி பெயரால் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் என்பவை குர்ஆனுக்கு முற்றிலும் முரணானது. மார்க்கமாக பின்பற்றுவது இணை வைப்பாகும்.

5) குழப்பத்தை ஏற்படுத்தி, ரத்தம் சிந்த வைக்கக் கூடியவன் என்றும் பூமிக்கு கலீஃபாவாக அனுப்பப் படுபவன்என்றும்இறைவன்கூறுவது சைத்தானைத்தான். ஆதமை அல்ல.

6) இஸ்மாயிலை அறுத்து பலியிட இபுறாஹிம்நபியின் கனவில்கூறியது சைத்தான்தான்.இறைவன் அல்ல.

7) ஹஜ்ஜின் காலம் குறிப்பிடப்பட்ட மாதங்களாகும். (2:197) அவை போர் தடுக்கப்பட்ட 4 மாதங்களான துல்ஹஜ், முகர்ரம், ஸபர், ரபியுல் அவ்வல் ஆகியவை. குறிப்பிடப் பட்ட 5 நாட்கள் என்று கூறுவது குர் ஆனுக்கு மாறு செய்வதாகும். அதன் காரணமாகவே இன்றைக்கு ஹஜ் செல்வது மிகவும் கடினமாகிவிட்டது.

8) தொழுகையில் மத்திமமான குறைந்த சப்தமிட்டு ஓதவேண்டும் என்று இறைவன் 17:110-ல் கட்டளை இட சப்தமிடாமல் ஓதுவது வசனத்திற்கு மாறு செய்வது ஆகும்.

நண்பரே! இவற்றைப் போல் இன்னும் நிறைய இறை நிந்தனை, இணைவைப்புக்களைமார்க்கம்என்ற

பெயரில் சைத்தான் நம்மிடையே புகுத்திவிட்டான். இவற்றையெல்லாம் செய்யும் இன்றைய முஸ்லிம்கள், சிந்திக்காமல், குருட்டுத்தனமாக வழிபாடு என்ற பெயரில் நாசத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இறைவன் இவர்களுக்கும், நம் அனைவருக்கும் நேர்வழிகாட்டப் பிரார்த்திப்போம்.

**அ.ரஹீம்:** மற்றொரு கேள்வி. 1400 வருடங்களாக எவ்வளவோ மார்க்க அறிஞர்கள், மேதைகள், மகான்கள் பின்பற்றி வந்த ஹதீஸ்களையும், வழிபாட்டு முறைகளையும் தவறு என்றும், இணை வைப்பு என்றும் கூறுகிறீர்கள். அவர்களுக்கெல்லாம் தெரியாதது உங்களுக்குத் தெரிந்து விட்டதா? அவர்களெல்லாம் முட்டாள்களா?

**மன்சூர்:** சைத்தான் ஒரு மாபெரும் சூழ்ச்சிக்காரன், மிகப்பெரிய வழிகேடன். 6:43 வசனத்தில் “அவர்கள் செய்து கொண்டிருந்ததையே சைத்தான் அவர்களுக்கு அழகாகக் காட்டி விட்டான்” என்றிருப்பதை சிந்தியுங்கள். அல்லாஹ்வின் வேதம் நம் எல்லோர் கைகளிலும் தவழ்கிறது. சந்தேகத்தைப் போக்குகிறது. வழிநடத்துகிறது. மேலும் அது ஒரே ஒரு புத்தகமாகவும் இருக்கிறது.

ஆனால் புஹாரி, முஸ்லிம், ஹனபி, ஷாபி, சஹாபாக்கள், அவுலியாக்கள், மகான்கள் மேற்படி யாரையேனும் தெரியுமா உங்களுக்கு, நல்லவரா, கெட்டவரா, யார் சான்று கூறுவது. ஒன்றா, இரண்டா ஓராயிரம் ஆட்களும் பிரிவுகளும், புத்தகங்களும் இவற்றை எல்லாம் எந்த உறுதிப்பாடு கொண்டு ஏற்று பின்பற்றுவது ஆலிம்ஷா அவர்களே? இவர்களைப் பற்றி ஏதேனும் ஒரு சிறு குறிப்பாவது குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறதா? 1400 வருடங்களாக தெரியாததா என்று கேட்கிறீர்கள். அலிப், லாம், மீம் போன்ற முத்திரை எழுத்துக்கள் என்ன என்று இத்தனை நூற்றாண்டுகளாக யாரும் ஏன் விளக்கவில்லை. குர்ஆன் கூறுகிறது, ஒவ்வொன்றிற்கும் ஒரு காலகட்டம் உண்டு (6:67) என்று. இதுதான் அந்த காலகட்டம். திக்குத் தெரியாத காட்டில் நம்மையெல்லாம் வழியறியாது திண்டாடும்படி இறைவன் விட்டு விட்டாரா? மூதாதையர்களையும் , பெரும்பான்மையும் பின்பற்றாதீர்கள். சைத்தான் உங்களை நரகத்தின் பக்கம் அழைத்தாலுமா? என்றெல்லாம் இறைவன் குர்ஆனில் கூறுவது உங்களின் செவிகளில் ஏறவில் லையா? அந்தோ பரிதாபம். கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, நரகத்திற்கு விறகுகளாக ஆவதை விட்டும் இறைவனிடம் பாவமீட்சி பெறுங்கள். நேர்வழியை தேடுங்கள்.

**அ.ரஹீம்:** நண்பரே, நான் விளங்கிக் கொண்டுதான் வருகிறேன். பிற மக்கள் சார்பாகத்தான் கேள்விகள் கேட்டேன். சந்திப்போம். அஸ்ஸலாமு அலைக்கும்.

**மன்சூர்:** மீண்டும் சந்திப்போம். சலாமுன் அலைக்கும். ○ ● ○

# ஹஜ்ஜின் காலம்

# நான்கு மாதங்கள்

இஸ்லாமியக் கடமைகளில் ஒன்றான ஹஜ் புனிதப் புயணம். அதற்குரிய காலமாக இறைவன் ஏற்படுத்தித் தந்த வரையறை சிதைக்கப்பட்டு குறிப்பிட்ட சில நாட்களே ஹஜ் செய்தல் கடமையாக்கப்பட்டு விட்டது. இது ஒரு மாபெரும் இறை குற்றம் ஆகும். ஹஜ்ஜுடைய மாதங்கள் எவை என்பதை நாம் இங்கு குர் ஆனிலிருந்து அறிய முற்படுவோம். இதற்கான விளக்கம் தரும் வசனங்களாக 9வது சூராவின் முதல் மூன்று வசனங்களை எடுத்துக் கொள்வோம்.

சூரா 9, **வசனம் 1**

இறைவனிடமிருந்தும் அவருடைய தூதரிடமிருந்தும் இணை வைத்து வணங்குபவர்களில் உங்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர் களுக்கு நிபந்தனை யிலிருந்து விடுதலை அளிக்கப்பட்டது.

**வசனம் 2**

எனவே நீங்கள் நான்கு மாதங்கள் வரை பூமியில் சுற்றித் திரியலாம். நீங்கள் இறைவனைத் தோற்கடிக்க முடியாது என்பதையும் நிராகரிப் போரை இறைவன் இழிவுப் டுத்துவார் என்பதையும், நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

இறைவன் இணை வைப்பவர் களைப் புனித நான்கு மாதகாலம் வரை (யுத்த காலத்தில் மட்டுமே இது சட்டம் ஆகும்) சுதந்திரமாக சுற்றித் திரிய அனுமதிக்கிறார் என்பதை வசனம் 2லிருந்து அறிந்து கொள்கிறோம். ஏனெனில் இந்த. நான்கு மாதகாலம் விசுவாசிகள் போர் செய்வதிலிருந்து தடுக்கப்பட் டுள்ளனர். இவ்வசனத்தை கவனித்துப் படிக்கவும். தொடர்ந்த நான்கு மாதங்களே புனித மாதங்களாக இருக்க முடியும் என்பதை எளிதாக நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது. எவ்வாறு இரண்டு மாதம் சுற்றித் திரியவும் பிறகு போர் செய்யவும் பின்னர் இரண்டு மாதம் சுற்றித் திரியவும் இறைவன் கூறியிருக்க முடியும்? எனவே இவ்வசனம் குறிப்பிடும் காலம் தொடர்ந்த நான்கு மாதங்களே என்பதை நாம் மிக எளிதாக அறிந்து கொள்ள முடிகிறது. இந்த நான்கு மாதங்கள் எவை? என்பதையும் குர்ஆன் நமக்கு விளக்கிக் கூறுகின்றது. இதற்குரிய விளக்கமாக, சூரா 9 ன் வசனம் 3ஐ கவனமாகப் படித்துக் கொள்ள வேண்டும்.

வசனம் 3:

இறைவனும் அவருடைய தூதரும் இணைவைத்து வணங்குபவர் களுடன் ஆன உடன்படிக்கையைக்

> ஹஜ் குறிப்பிடப்பட்ட மாதங்களில் கடைப்பிடிக்க வேண்டிய கடமை யாகும். (2:197)
> இவ்வசனம் ஹஜ்ஜுடைய காலத் தினை மாதங்களில் குறிப்பிடுகின்றது. எனவே 9:3ல் குறிப்பிட்டுள்ள படியும் 2:197ல் குறிப்பிட்டுள்ள படியும் ஹஜ்ஜுடைய காலம் மாதங்களே என்ற விவரத்தை நாம் அறியப்பெறுகின்றோம். இவை துல்ஹ ஜ், முஹர்ரம், சபர், ரபி - அவ்வல் (12,1,2,3) ஆகிய தொடர்ந்த நான்கு மாதங்களாகும்.

கைவிட்டு விட்டனர் என்பதை இந்த மாபெரும் ஹஜ்ஜுடைய நாளில் அனைத்து மக்களுக்கும் அறிவிக்கின்றார். (9:3)

இவ்வசனத்தில் இறைவன் அறிக்கையிடுகின்றார். இந்த ஹஜ்ஜுடைய . நாளில் இருந்து உங்களுக்கு விடுதலை அளிக்கப் படுகின்றது என்று. இவ்வறிவிப்பு ஹஜ் மாதத்தின் ஆரம்ப நாளில் அறி விக்கப்படுகின்றது . இன்றிலிருந்து உனக்கு விடுதலை என்றோ இன்றிலிருந்து உனக்கு விடுமுறை என்றோ கூறப்பட்டால் அது அந்த நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டியதாகும். இங்கு இறைவன் ஹஜ்ஜுடைய நாளில் என்று கூறுவதால் அது அம்மாதத்தின் ஆரம்ப நாளைக் குறிப்பிடுவதாக இருக்கிறது. வசனம் 2ல் நான்கு மாதங்கள் வரை விடுதலை எனக்குறிப்பிடப்படு வதால் இது மாத ஆரம்பநாளை மேலும் உறுதிப்படுத்திக் கூறுவதாக இருக்கிறது.

**வசனம் 9:36ஐக் கவனியுங்கள்**

இறைவனிடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பனிரண்டு தான். வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்து இதுவே தீர்மானிக்கப்பட்டதாகும்.
இவற்றில் நான்கு புனிதமானவை. (9:36)

**வசனம் 2:197ஐக் கவனியுங்கள்**

ஹஜ் குறிப்பிடப்பட்ட மாதங்களில் கடைப்பிடிக்க வேண்டிய கடமை யாகும். (2:197)

இவ்வசனம் ஹஜ்ஜுடைய காலத் தினை மாதங்களில் குறிப்பிடுகின் றது. எனவே 9:3ல் குறிப்பிட்டுள்ள படியும் 2:197ல் குறிப்பிட்டுள்ள படியும் ஹஜ்ஜுடைய காலம் மாதங்களே என்ற விவரத்தை நாம் அறியப்பெறுகின்றோம். இவை துல்-ஹஜ், முஹர்ரம், சபர், ரபி - அவ்வல் (12,1,2,3) ஆகி!! தொடர்ந்த நான்கு மாதங்களாகும் ஆனால் இன்றைய முஸ்லிம்கள் ரஜப், துல்காயிதா, துல் - ஹஜ், முஹர்ரம் (7,11,12,1) என்று புனித மாதங்களை மாற்றிக் கொண்ட துடன் ஹஜ் செய்யும் காலத்தினைக் குறுக் ஒரு சில நாட்களே கடமையாக்கி கொண்டனர். வசனம் 9:3 நிராகரிப்பின் காரணமாகவே மாதங்களை மாற்றியமைத்துக் கொள்கின்றனர் என்று கண்டித்துக் கூறுகிறது. ஆகவே இறைவன் ஏற்படுத்திய வழக்கத்தை (சுன் னத்தை) மாற்றாமல் பின்பற்றி இறைவனது திருப்பொருத்தத்தைப் பெற்றுக் கொள்ள முயல்வோமாக! அல்ஹம்து லில்லாஹ்!

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

**இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது**


## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.

www.kadavulmattum.org

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662